Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 8 திங்கட்கிழமை (21-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:57

## யுத்தக் கைதிகள் ஐவரை புலிகள் இன்று விடுவிப்பர்?

வவுனியா,ஜன.21

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள பதினெட்டு யுத்தக் கைதிகளில் நான்கு அல்லது ஐந்து பேர் இன்று விடுவிக்கப்படுவர் என நம்பகமாக அறிய வருகின்றது.

யுத்தத்தில் காணாமற்போன படையினரின் உறவினர்கள் பாதுகாவலர்கள் மற்றும் சமாதானத்தை வலியுறுத்தும் தென்பகுதிப் பொது அமைப்புக்களின் பிரதிநிகள் என சுமார் இரண்டாயிரம் பேர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அவர்களின் விஜயத்தை ஒட்டி, அவர்களின் வருகையைக் கௌரவிக்கும் முகமாகவும் -

தற்போதைய அமைதி முயற்சிகள் தொடர்பான தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நோக்குடனும் -

இந்தக் கைதிகளை விடுவித்து, இக்குழுவினருடன் அனுப்பி வைக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் உறவினர் உட்பட 2 ஆயிரம் பேர் மடு சென்றனர்

வவுனியா,ஜன.21

காணாமற்போன படையினரின் பாதுகாவலர்கள், சமாதானத்தை வலியுறுத்திவரும் தென்னிலங்கையைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பௌத்தபிக்குகள் உட்பட சுமார் 2 ஆயிரம் பேர் நேற்று மடுத் தேவாலயத்தைச் சென்றடைந்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து 35 வாகனங்கள் கொண்ட வாகன அணியில் புறப்பட்ட இவர்கள், அன்றிரவு அநுராதபுரத்தில் தங்கினர். அங்கிருந்து மறுநாள் புறப்பட்டு நேற்றுக்காலை அவர்கள் வவுனியா விகாரையை வந்தடைந்தனர்.

வவுனியா விகாராதிபதி வண. சியம்பலகஸ்வேவ தேரர் இவர்களை வரவேற்று, மதிய உணவுவழங்கி உபசரித்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் பிரமணாளம்குளம் சோதனை நிலையம் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மடுவைச் சென்றடைந்தனர்.

மடுத்தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட பிரார்த்தனைகளில் அவர்கள் பங்குபற்றினர்.

இன்று மாலை அல்லது நாளை காலை இவர்கள் வவுனியா திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# புலிகளின் யுத்த நிறுத்தம் மேலும் ஒருமாதம் நீடிப்பு!

## நோர்வே குழுவினருடன் நாளை லண்டனில் பாலசிங்கம் பேச்சு

யாழ்ப்பாணம்,ஜனவரி21

**தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு மாத காலத்துக்கு ஒருதலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தியிருந்த யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்திருக்கின்றனர்.**

**ஜனவரி 24ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடையும் போர் ஓய்வுக்காலம் மேலும் ஒரு மாதத்துக்கு - பெப்ரவரி 24 ஆம் திகதி நள்ளிரவுவரை - நீடிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகம் நேற்று அறிவித்தது.**

"சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் முன்னெடுக்கும் நோக்குடன் போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்க முடிவெடுத்துள்ளோம். ஒரு நிலையான - நிரந்தரமான - யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதில் நோர்வே அரசு தற்போது ஈடுபட்டிருக்கிறது. அமைதிக் காலத்தை மேலும் நீடிக்க நாம் எடுத்த முடிவு நோர்வே அரசின் சமரச முயற்சிக்கு மேலும் கால இடைவெளியைக் கொடுக்கும் என நம்புகிறோம்" - இவ்வாறு புலிகளின் வன்னித் தலைமையகத்தில் இருந்து விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க விடுதலைப் புலிகள் எடுத்த முடிவை அந்த அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசிற்கு அறிவித்திருக்கிறார். நோர்வே அரசு அதனை ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்திருக்கிறது.

இதேவேளை -

நோர்வேயின் சமாதானக் குழுவினர் நாளை (செவ்வாய்க்கிழமை) லண்டன் விஜயம் செய்து, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் விரி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆயுதங்கள் ஒப்படைக்கப்படவில்லை

கொழும்பு,ஜன.21

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிப்பதற்கு உள்துறை அமைச்சு வழங்கியிருந்த மன்னிப்புக் காலக்கெடு கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்தது.

ஆனால் இக்காலப்பகுதியில் அத்தகைய ஆயுதங்கள் எதுவுமே ஒப்படைக்கப்படவில்லை என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாட்டில் குறைந்தது 20,000 ஆயுதங்கள் சட்டவிரோதமாகப் புழக்கத்தில் உள்ளன. (ஐ)

## யாழ். சிறைச்சாலையில் இருந்து கைதிகள் தப்ப உதவிய இரு காவலர்கள் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.சிறையிலிருந்து தப்பியோடி கடந்த ஆறு மாதங்களாகப் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவந்த நான்கு கைதிகளில் ஒருவர் பொலீஸாரிடம் சிக்கினார்.

இதனையடுத்து இவர் சிறையிலிருந்து தப்புவதற்கு உதவியதாகக் கூறப்படும் இரு சிறைக்காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி தப்பியோடிய நான்கு கைதிகளுள் ஒருவரான செல்லத்துரை ரஞ்சன் என்பவரையே மானிப்பாய் பொலீஸார் கடந்த 11 ஆம் திகதி கைது செய்தனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரும், மற்றைய இருவரும் மற்றும் திருட்டுக் குற்றச் சந்தேக நபர் ஒருவரும் ஒன்றாகத் தப்பிச் சென்றிருந்தனர்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள ரஞ்சனை மானிப்பாய்ப் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கான தூதராக மீண்டும் மங்கள முனசிங்க?

கொழும்பு,ஜன.21

இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக மங்கள முனசிங்கவை மீண்டும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் பிரிட்டனில் இலங்கைத் தூதராக இவர் கடமையாற்றி வருகின்றார்.

இந்தியாவில் இலங்கைத் தூதராக நீண்டகாலம் பணிபுரிந்த மங்கள முனசிங்க, இரு வருடங்களுக்கு முன்னர் பிரிட்டனுக்கு மாற்றப்பட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவைப் பெறும் நோக்கில் புதிய அரசு இந்த நடவடிக்கையை எடுப்பதாகக் கருதப்படுகிறது. (ஐ-3)

## பிரதமரின் கொள்கை விளக்க உரை

கொழும்பு,ஜன.21

புதிய அரசின் கொள்கைகள், எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட கொள்கை விளக்க உரையாற்றவுள்ளார்.

இந்த உரை மீதான விவாதம் எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் இடம்பெறவிருக்கின்றது.

அமைச்சர்கள் மட்டத்திலான அறிக்கையாக இந்த உரை நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பது, வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆகியன தொடர்பான விவரங்களை பிரதமர் இந்த விளக்க உரையில் வெளியிடுவார்.

## கண்டி வீதியில் ஓமந்தை வரை திருத்தவேலைகள் ஆரம்பம்

வவுனியா,ஜன.21

கண்டி வீதியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தாண்டிக்குளம், ஓமந்தை வரையான பகுதியைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா புனரமைப்புச் சபை இந்தப் பணியை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக ஓமந்தையில் இருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படும்.

வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பாதையைத் திறப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக வீதி புனரமைக்கப்படவிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

## மட்டக்களப்பு – கொழும்பு இரவு பஸ் சேவை ஆரம்பம்

### திரையரங்குகளிலும் இரவுக்காட்சிகள்

மட்டக்களப்பு,ஜன.21

கடந்த சுமார் பத்து ஆண்டு காலத்துக்குப் பின்னர் இன்று திங்கட்கிழமை முதல் மட்டக்களப்பு - கொழும்பு இரவு நேர பஸ்சேவைகள் ஆரம்பமாகின்றன.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தமும், அரசுத்தரப்பின் மோதல் தவிர்ப்பும் தொடர்ந்து அமுலில் இருப்பதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலும் இயல்பு நிலை தோன்றியுள்ளது.

நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் நள்ளிரவு வரை மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது.

இரவு நேரப் படக்காட்சிகளை விரைவில் ஆரம்பிக்க உள்ளதாக சினிமா திரையரங்க உரிமையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மண்எண்ணெய் விற்கும் ஊர்திகள் இன்று பேரணி!

யாழ்ப்பாணம்,ஜன.21

மாட்டுவண்டில்கள் மற்றும் ஊர்திகள் மூலம் எரிபொருள் விற்பனை செய்வோர் தமக்கு எரிபொருள்கள் வழங்குவது நிறுத்தப்பட்டிருப்பதை ஆட்சேபித்து பேரணி ஒன்றை இன்று நடத்தவுள்ளனர்.

அரச அங்கீகாரம் பெற்று எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்காமல் முகவர் நிலையங்கள் மற்றும் தனியாருக்கு எரிபொருளை விநியோகிப்பதன் மூலம் பதுக்கல் வியாபாரம் நடத்தப்படுவதாகத் தெரிவித்து யாழ்-மாவட்ட எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகள் சங்கம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது.

காலை 9 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து மாட்டுவண்டிகள் மற்றும் ஊர்திகளுடன் ஆரம்பமாகும் இந்தப் பேரணி, நகர வீதிகள் வழியே யாழ் செயலகத்தைச் சென்றடையும். அங்கு வைத்து அரச அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள், சிறுவருக்கு எதிரான முறைப்பாடுகளை ஏற்க தனிப்பிரிவு

## யாழ்.பொலீஸ் நிலையத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.21

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது இழைக்கப்படும் துஷ்பிரயோக நடவடிக்கைகள் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக தனியான பிரிவொன்று யாழ்.பொலீஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் அத்தியட்சகர் சி.என்.குடாஹெட்டி தெரிவித்துள்ளார்.

அண்மைய நாள்களாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் சமூகத்திலுள்ள பல்வேறு தரப்பினரதும் இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் -

அதனையடுத்தே இப்பிரிவை அமைப்பதற்கான முயற்சிகளில் பொலீஸார் ஈடுபட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவோர் நேரிலோ, தொலைபேசி மூலமோ யாழ். பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-9)



கடந்தவாரம் கொழும்பிலிருந்து சென்ற செய்தியாளர்களோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் உரையாடிய சமயம் எடுக்கப்பட்ட படங்களில் ஒன்று.

### கிழக்கிலிருந்து 1,250 பேர் ஹஜ் கடமைக்குப் பயணம்

காத்தான்குடி,ஜன.21

கிழக்கு மாகாணத்திலிருந்து இம்முறை சுமார் 1,250 பேர் புனித மக்கா நகர் பயணமாகவுள்ளனர் என்று ஹஜ் முகவர் நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி பிரதேசத்திலிருந்து சுமார் 250 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லவுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, ஏறாவூர், ஓட்டமாவடி, கிண்ணியா, மூதூர் பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையானோர் இம்முறை புனித மக்கமாநகர் செல்லவுள்ளனர்.

(ஐ)

# தேர்தல்களை ஒத்திவைக்க பொ.ஐ.மு. அரசைக் கோரும்

கொழும்பு,ஜன.21

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்திவைக்குமாறு பொ.ஐமுன்னணி அரசைக் கோரவிருக்கிறது. வடக்கு - கிழக்கில் இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் இத்தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன. தேர்தல்களை அறுமாதங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று பொ. ஐ.முன்னணி கோரவிருக்கிறது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்திக்கவிருக்கிறார்.

பொஐமு. அரசியல் வாதிகள் பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதும், ஆதரவாளர்கள் தாக்கப்பட்டு வருவதும் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று கோரவிருப்பதற்கான காரணங்களாகும்.

(ஐ)



வன்னிப் பகுதியில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. வவுனியாவிலிருந்து விதம்விதமான பொருள்களுடன் வாகனங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு வருகின்றன. கடந்த வாரம் கொழும்பிலிருந்து பெரும் எண்ணிக்கையில் சென்ற பத்திரிகையாளர்களையும் அவர்களது வாகன அணியையும் வியப்புடன் நோக்கும் வன்னிச் சிறுவர்களை படத்தில் காணலாம்.

# காணாமற்போன குடும்பஸ்தர் யாழ்.சிறையில் தடுத்துவைப்பு!

## தகவல் தெரியாது உறவினர்கள் அவலம்

யாழ்ப்பாணம்,ஜன.21

கடந்த 4ஆம் திகதி முதல் காணாமற்போனதாகக் கூறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை மகேந்திரன் (வயது 54) என்ற குடும்பஸ்தரே கடந்த 4 ஆம் திகதியில் இருந்து காணாமற்போயுள்ளதாக அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீட்டிலிருந்து வேலைக்குச் செல்வதாகக் கூறிப்புறப்பட்ட இவரை யாழ் நகரப் பகுதியில் வைத்து பொலீஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து யாழ்நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 9 ஆம் திகதி ஆஜர் செய்திருந்தனர் என்றும் -

இவரை 23ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டதை அடுத்து, அன்று முதல் அவர் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும - சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப நபரைக் காணவில்லை என்று பத்திரிகையில் செய்தி வெளியாகி இருப்பதை அடுத்து, அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை அவரது குடும்பத்தவருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப குடும்பஸ்தர் மனநோயால் பாதிக்கப்பட்டு சில மாதங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர் என்று உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

அவரைக் கைது செய்த தகவலை பொலீஸார் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தாததால் உறவினர்கள் கடந்த சில நாள்களாக அவரைத் தேடி அலைந்து திரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6)

### திருவாசக முற்றோதல்

சுழிபுரம்,ஜன.21

பொன்னாலை பிள்ளையார் ஆலயத்தில் மாதம் தோறும் வரும் முதல் செவ்வாய்க்கிழமைகளில் திருவாசகம் முற்றும் ஓதுதல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-28)

# கொழும்பு - மட்டக்களப்பு ரயில் பாதை திருத்தப்படும்

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கான ரயில் சேவையை எதிர்வரும் மார்ச் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 7 வருடங்களுக்கு மேலாக இந்த ரயில் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இச் சேவை கடந்த திங்கட்கிழமை முதல் வெலிக்கந்தை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெலிக்கந்தையிலிருந்து வாழைச்சேனை வரையிலான ரயில் பாதையைச் சீரமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இவ்வேலைகள் இன்னும் சில நாள்களுக்குள் பூர்த்தியடைந்து விடும். அதனைத் தொடர்ந்து வாழைச்சேனை வரை ரயில் சேவை நீடிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் பிரியால் டி சில்வா தெரிவித்தார்.

மட்டக்களப்பு வரையான பாதையும் விரைவில் சீரமைக்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்தார்.

(ஐ)

### வேம்படி மகளிர் கல்லூரி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.21

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிக்காக மூடப்பட்டிருந்த வேம்படி மகளிர் கல்லூரி நாளை செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் திறக்கப்படுகிறது. மாணவிகளை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்திருக்கிறார்.

(ஐ)

# மாவனல்லை பிரதேச சபை ஐ.தே.கவின் கைக்கு மாறும்

கொழும்பு,ஜன.21

மாவனல்லைப் பிரதேச சபையின வரவு - செலவுத் திட்டம் இரண்டு வாக்குகளினால் தோல்வியுற்றது. இதனால் பொ.ஐ.முன்னணியின் அதிகாரத்தின் கீழுள்ள பிரதேச சபை பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

ஆட்சித் தரப்பிலுள்ள பொ.ஐ.முன்னணி அங்கத்தவர் ஒருவர் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து 'பட்ஜட்'டுக்கு எதிராக வாக்களித்தார். இதனாலேயே இந்நிலைமை தோன்றியது.

இதேபோன்று மேலும் இருவர் அல்லது மூவர் எதிர்த்தரப்புக்கு மாறி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மாவனல்லைப் பிரதேச சபையின் நிர்வாகம் ஐ.தே.கட்சி வசம் மாறும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

(ஐ)

## உள்ளூராட்சித் தேர்தல்களில்

# மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும்?

கொழும்பு,ஜன.21

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும் என்று தெரிய வருகிறது.

கட்சியின் உறுப்பினர்களும் அபிமானிகளும் மலையக மக்கள் முன்னணி தனித்தே போட்டியிட வேண்டும் என்று விரும்புகின்றனர். கட்சியின் தனித்துவம் மழுங்கடிக்கப்பட்டு விடக் கூடாது என வலியுறுத்துகின்றனர் என்று முன்னணியின் செயலாளர் நாயகம் பெ.சிவலிங்கம் கூறினார்.

மலையகத்தில் சகல பிரதேசங்களில் இருந்தும் வேட்பாளர்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இம்மாதம் 25ஆம் திகதி இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

இ.தொ.கா.,ம.ம.முன்னணி கூட்டு என்னவாவது; இணைந்து போட்டியிடுவீர்களா என்று வினவிய பொழுது அவர் கூறியதாவது:-

இ.தொ.கா.ம.ம.மு.தனியான கட்சிகள். அவை தனித்துவத்தை இழந்து விடவில்லை. மலையக மக்கள் முன்னணி பலரின் கூட்டு முயற்சியால் உருவானது. தனி ஒருவரின் கட்டுப்பாட்டில் இயங்குவது அல்ல.

எதிர்வரும் 25ஆம் திகதி கட்சியின் அதிஉயர் அரசியல் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திலேயே எவ்வாறு போட்டியிடுவோம் என்பதைத் தீர்மானிப்போம்.

- இவ்வாறு பெ.சிவலிங்கம் கூறினார்.

(ஐ)

# சமாதானம் நிலைபெற வேண்டி கத்தோலிக்க மக்கள் பேரணி

## கோப்பாய் - திருநெல்வேலி ஆலயப் பங்கின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஜன.21

நாட்டில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு இறையாசீர் வேண்டியும் கோப்பாய், திருநெல்வேலிப் பகுதி றோமன் கத்தோலிக்க மக்கள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கோப்பாய் - திருநெல்வேலிப் பகுதி ஆலய பங்குத்தந்தை அருளேஸ்வரன் (அமதி) அடிகளாரின் ஆலோசனைப்படி அந்தப் பகுதி மக்கள் அனைவரும் மதவேறுபாடு இன்றி இந்த சமாதானப் பேரணியில் கலந்துகொண்டனர்.

கோப்பாய் மரியன்னை ஆலய முன்றிலில் இருந்து சுமார் மூந்நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகளைத் தாங்கியவாறு சைக்கிள்களில் ஊர்வலமாகப் புறப்பட்டு பருத்தித்துறை வீதி ஊடாக கோப்பாய் சந்தி - உரும்பிராய் வீதி, பலாலி வீதியூடாக கோண்டாவில் செபஸ்தியார் ஆலய முன்றிலைச் சென்றடைந்தனர்.

நாட்டில் சமாதானம் நிலைக்க இறையாசீர் வேண்டி அங்கு விசேட வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது.

(ஐ-6-18-180)

# மாணவிகளோடு சேஷ்டைபுரியும் இளைஞர் மீது பொலீஸார் 'கண்'

யாழ்ப்பாணம்,ஜன.21

நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவிகள் உட்பட யுவதிகள் மீது சேஷ்டை விடும் இளைஞர் கும்பல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க யாழ்.பொலீஸார் தயாராகியுள்ளனர்.

வீதிகளில் காத்து நிற்கும் இளைஞர்கள், பெண்கள் மீது சேஷ்டை விடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே பொலீஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

நல்லூர் முத்திரைச் சந்தைப்பகுதி, நகரில் கன்னாதிட்டிச் சந்தி ஆகிய இடங்களில் யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் திடீர் வேட்டையை நடத்தி, யுவதிகளோடு சேஷ்டை புரியக் காத்துநின்ற இளைஞர்கள் பலரை மடக்கினர். அவர்கள் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸார் எச்சரிக்கை செய்துள்ளனர்.

(ஐ-3-6-86)

# நாடகங்களின் கலையரங்கம்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்மத்திய கல்லூரி அரங்கியல் மன்றமும் வசந்தகான சபா கலைஞர் குழுவும் இணைந்து வழங்கும் பாரம்பரிய மேடைநாடகங்களின் கலையரங்கம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மத்திய கல்லூரி திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

பத்துக்கு மேற்பட்ட நாடகங்களின் பிரதான பகுதிகள் நடித்துக் காண்பிக்கப்படும். யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் பாடம் பயிலும் மாணவர்கள், ரசிகர்கள் இந்த நாடகங்களைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# பொலீஸ் - பொதுமக்கள் மோதல்; நைஜீரியாவில் பத்துப் பேர் பலி!

லாகோஸ்,ஜன.21

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இடம்பெற்ற வன்முறை மோதலில் 10பேர் உயிரிழந்தனர்.




கட்ஸினா மாகாண வர்த்தக நகரான டன்ஜாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த வன்முறைகளில் 7 பொலிஸாரும் 3 பொதுமக்களும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வீதியில் நின்றிருந்த பொலீஸார் ஒருவர் மீது தள்ளுவண்டி ஒன்று மோதியதையடுத்தே கலவரம் வெடித்தது.

தள்ளுவண்டியைத் தள்ளி வந்த வயோதிபர் மன்னிப்புக் கேட்ட போதும் அவரை கண்முடித்தனமாகப் பொலீஸார் தாக்கியதால் வயோதிபர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் -

இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் ஆத்திரமடைந்து பொலீஸாரைத் தாக்கியதாகவும் -

நேரில் கண்டவர்கள் கூறினர்.

பொது மக்களிடமிருந்து ஒருவாறு பொலீஸார் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சிறிதுநேரம் கழித்து அங்கு வந்த பொலீஸார் மக்களைத் தாக்கினர். ஆனால் பொலீஸாரைவிட அதிகளவில் திரண்டுவிட்ட பொதுமக்கள் பதில் தாக்குதலில் இறங்கினர். அப்போது இடம்பெற்ற மோதலில் 7 பொலீஸாரும் மூன்று பொதுமக்களும உயிரிழந்தனர்.

அப்பகுதியில் பதற்றநிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலீஸார் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்ற அச்சத்தில் டன்ஜா நகர மக்கள் வேறிடங்களுக்கு சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

நைஜீரியாவில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைக்கப்பட்ட பின்னரும், பொலீஸாரும் படையினரும் தாம் யாருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்ற மனப்பாங்கை இப்போதும் கொண்டிருப்பதால் பொதுமக்களுடன் அவர்களுக்கு அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. (ஒ)

# அமெரிக்க இராணுவ ஹெலி ஒன்று ஆப்கானில் விழுந்து நொறுங்கியது!

காபூல்,ஜன.21

அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று ஆப்கானிஸ்தானில் விழுந்து நொறுங்கியது.

நேற்றுக்காலை 7.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) வடக்கு ஆப்கான் மலைப்பகுதியில் இந்த விபத்து நேர்ந்தது. ஹெலிகொப்டரில் 7 பேர் இருந்ததாகக் கூறிய அமெரிக்க இராணுவப் பேச்சாளர், அவர்களில் சிலர் விபத்தில் உயிர் தப்பிவிட்டதாகத் தெரிவித்தார்.

இந்த விபத்தில் இருவர் உயிரிழந்ததாக முதலில் வெளிவந்த தகவல்கள் தெரிவித்தன.

தலைநகர் காபூல் அருகேயுள்ள பஹ்ரம் விமானத்தளத்திலிருந்து வடக்கு ஆப்கான் நோக்கிச் சென்ற அந்தக் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கிய காரணம் குறித்த விவரங்கள் எதனையும் உடனடியாக வெளியிட முடியாதுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## ஆப்கான் - ரஷ்யா இடையே

# அதிக உயரத்தில் அமைந்துள்ள 'சலாங்' குகை திறக்கப்பட்டது

காபூல்,ஜன.21

உலகில் மிக உயரமான பகுதியில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் குகையை ஆப்கான் மற்றும் ரஷ்யத் தலைவர்கள் மீண்டும் உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்தனர்.

பனிப்படலங்களால் மூடப்பட்ட 'இந்து குஷ்' மலைத் தொடரில், கடல் மட்டத்திலிருந்து 3 ஆயிரத்து 363 மீற்றர்கள் உயரத்தில் 'சலாங்' என்ற அந்தக் குகை அமைந்துள்ளது.

சுமார் 2 மைல்கள் நீளமுடைய இந்தக் குகையின் ஒருபுறம் ஆப்கானிஸ்தானிலும் மறுபுறம் ரஷ்யாவிலும் உள்ளன. ஆப்கானிஸ்தானுக்கு ரஷ்யா அனுப்பவுள்ள உதவிப் பொருள்களை எடுத்துவர வசதியாகத் தற்போது இந்தக் குகை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'சலாங்' குகை 1956 - 64 ஆண்டுக் காலப்பகுதியில் மலையைக் குடைந்து உருவாக்கப்பட்டது. ஆப்கானில் போரில் ஈடுபட்டிருந்த சோவியத் படைகளுக்கு பிரதான விநியோக மார்க்கமாக இந்தக் குகைப்பாதை இருந்து வந்தது. பின்னர் தலிபான்களுக்கு எதிராகப் போராடிவந்த எதிர்ப்படையினர் இந்தக் குகையின் இரு புறங்களையும் தகர்த்திருந்தனர். தற்போது மீண்டும் குகை புனரமைக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# அமெரிக்காவைக் கண்டிக்குமாறு பிரிட்டிஷ் பிரதமருக்கு அழுத்தம்!

லண்டன்,ஜன.21

குவண்டனமோ தளத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள தலிபான் கைதிகளை அமெரிக்க நடத்தும் விதம் தொடர்பாக பிரிட்டிஷ் அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட தலிபான்களை கியூபாவில் உள்ள தனது தளத்தில் அமெரிக்கா சிறைவைத்துள்ளது. கைதிகளின் தாடியை

உலக அரங்கில்

மழித்து, சங்கிலிகளால் அவர்களைப் பிணைத்து கூண்டுகளில் அடைத்து வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இஸ்லாமியர்களான தலிபான்களுக்கு தாடி வைத்திருப்பது மத ரீதியாக கட்டாயமாகும். ஆகவே அவர்களது தாடிகளை மழித்தது மத உரிமைகளை மீறும் செயல் என்று அமெரிக்கா மீது பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அத்துடன் தலிபான் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலில் பங்கேற்றுள்ள பிரிட்டன், அமெரிக்கா தலிபான் கைதிகளைக் கையாளும் விதம் குறித்து பிரிட்டிஷ் அரசு கண்டனம் வெளியிடவேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்களும், சில பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும் வற்புறுத்தி வருகிறார்கள்.

தலிபான் கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும் என்று தானும், அமெரிக்க அதிபர் புஷ்ஷும் இணக்கம் கண்டிருப்பதாக வியாழக்கிழமை பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளயர் அறிவித்திருந்தார். ஆனால் இது மனித உரிமை ஆர்வலர்களைச் சமாதானப் படுத்தவில்லை என்று கூறப்படுகிறது.

பிடிபட்ட தலிபான்களை போர்க்காலக் கைதிகள் என்று கூறாமல், 'சட்டவிரோத சண்டைக்காரர்கள்' என்றே அமெரிக்கா குறிப்பிடுகிறது. ஜெனிவா உடன்படிக்கைப்படி போர்க்காலக் கைதிகளுக்கான அத்தனை உரிமைகளும் தலிபான் கைதிகளுக்கு வழங்கப்படாததை நியாயப் படுத்தவே அமெரிக்கா இந்தத் தந்திரத்தைக் கையாள்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மனித உரிமை ஆர்வலர்களின் வற்புறுத்தலை அடுத்து, கியூபாவின் குவாண்டனாமோ தளத்தில் உள்ள எண்பது தலிபான் கைதிகளையும் பார்வையிட அதிகாரிகள் குழு ஒன்றை பிரிட்டன் அனுப்பியுள்ளது.

அமெரிக்காவில் சிறைவைக்கப்படும் கைதிகளை விசாரணை இன்றி நீண்டகாலம் தடுத்துவைக்க முடியாதென்றும் -

அதனாலேயே கியூபாவிடம் குத்தகைக்குப் பெறப்பட்ட குவாண்டனாமோ தளத்தில் தலிபான்களை அமெரிக்கா வைத்துள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## 'பிரிட்டிஷ் தலிபான்கள்' மீதான விசாரணைகள் லண்டனில்?

கியூபாவின் குவண்டனமோ தளத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள தலிபான் கைதிகளில் 3 பிரிட்டிஷாரும் உள்ளனர். தலிபான்களுடன் இணைந்து போராடிய இந்த பிரிட்டிஷார் மீதான விசாரணைகளை பிரிட்டனில் நடத்த பிரிட்டிஷ் அரசு விரும்புவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா நடத்தும் விசாரணையில் இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் வாய்ப்பு உள்ளதாகவும் -

அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற பிரிட்டிஷ் அரசு முயற்சிப்பதாகவும் - 'தி பினான்ஸ் ரைம்ஸ்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அல்கெய்டா மற்றும் தலிபான் அமைப்புகளில் இணைந்து போராடிய சுமார் 30பிரிட்டிஷ் பிரஜைகள் பிடிபட்டு ஆப்கானிலும், பாகிஸ்தானிலும் சிறைவைக்கப்பட்டுள்ளதாகவும் -

இவர்களும் விரைவில் குவண்டனமோவுக்கு கொண்டு செல்லப்படலாம் என்றும் - அந்தப்பத்திரிகை தெரிவித்தது.

தலிபான்களுடன் இணைந்து போராடிய அமெரிக்கர் ஒருவர் அமெரிக்கப் படையினரால் பிடிக்கப்பட்டு தற்போது அமெரிக்காவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# இந்திய விமானத்தை பாக். சுட்டது

பாகிஸ்தானிய வான்பரப்பில் பறந்த இந்தியத் தானியங்கி விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியுள்ளதாகப் பாகிஸ்தானிய இராணுவம் அறிவித்துள்ளது.

இதனை மறுத்துள்ள இந்தியப் பாதுகாப்புத்துறை வழக்கமான பணிகளில் ஈடுபட்ட தமது தானியங்கி விமானங்கள் பத்திரமாகத் தளங்களுக்குத் திரும்பியிருப்பதாகத் தெரிவித்தது.

சில வாரங்களின் முன்னர் பாகிஸ்தானிய தானியங்கி விமானம் ஒன்றை இந்தியப் படைகள் சுட்டு வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# ஸ்பெயினில் இரு தீவிரவாதிகள் கைது!

ரோம்,ஜன.21

ஸ்பெயினில் அல்கெய்டா தீவிரவாதிகள் இருவரை ஸ்பானியப் பொலீஸார் கைது செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

அரபுக்கள் அல்லாத அந்த இருவரும் ஆசிய அல்லது ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடுமென்றும் -

விமானத் தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடத்த அவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் - அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

கைதான இருவரும் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் தாக்குதல் பற்றியோ தற்போது அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியோ அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. (ஒ-4)



கொங்கோவில் 'நைரகொங்கோ' எரிமலை வெடித்ததையடுத்து கோமா நகரில் இருந்து இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் தற்போது தமது இருப்பிடங்களுக்குத் திரும்பத்தொடங்கியுள்ளர். பல அடிகள் உயரத்துக்கு தீக்குழம்புச் சாம்பல்கள் கோமா நகரை மூடியிருப்பதைப் படங்களில் காணலாம்.

# ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு!

சென்னை,ஜன.21

தமிழகத்தில் ஆண்டிப்பட்டி சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலைப் புறக்கணிக்கப்போவதாக தமிழ் மாநில காங்கிரசும், இடதுசாரிகட்சிகளும் அறிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் சென்னையில் அந்தக் கட்சிகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா போட்டியிடும் ஆண்டிப்பட்டித் தொகுதியில் நியாயமான - சுதந்திரமான - முறையில் தேர்தல் நடைபெறும் என்று தாங்கள் நம்பவில்லை என்பதால் இந்த முடிவை எடுத்ததாகவும் -

சைதாப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய தொகுதிகளில் போலி வாக்காளர் பெயர்கள் பெருமளவில் வாககாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, அங்கு தேர்தல் தள்ளிவைக்கப்பட்ட நிலையில், அவற்றை விட அதிக எண்ணிக்கையில் போலி வாக்காளர்கள் ஆண்டிப்பட்டித் தொகுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் -

ஆகவே அந்தத் தொகுதியில் தேர்தல் நடத்துவதன் பின்னணியில் மோசடி உள்ளதாகவும் -

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் என்.சங்கரய்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ஆர்.நல்லகண்ணு ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் வேட்பாளர் எவரையும் நிறுத்தப்போவதில்லை என்று இந்தியக் காங்கிரஸ் கட்சியும் அறிவித்துள்ளது. ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து வி. ஜெயச்சந்திரன் என்பவரை ம.தி.மு.க. நிறுத்தியுள்ளது.

சைதாப்பேட்டை, வாணியம்பாடி, ஆண்டிப்பட்டி ஆகிய 3 தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடக்க வேண்டியுள்ள போதும், வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாகக் கூறி சைதாப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய தொகுதிகளில இடைத் தேர்தலை ஒத்திவைத்த தேர்தல் ஆணையம், ஆண்டிப்பட்டியில் மட்டும் தேர்தல் நடத்த உத்தரவிட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்து குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ள தி.மு.க., 3 தொகுதிகளிலும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறாவிட்டால் ஆண்டிப்பட்டித் தேர்தலை புறக்கணிக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளது.

இந்தியாவில் மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல்களை மாநில தேர்தல் ஆணையங்களே, மத்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலோடு நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## பா.ஜ.கட்சியில் இணைகிறார் திருநாவுக்கரசு

சென்னை,ஜன.21

தமிழகத்தில் எம்.ஜி.ஆர். அ.தி.மு. கட்சியின் நிறுவனத் தலைவர் திருநாவுக்கரசு அக்கட்சியைக் கலைத்துவிட்டு, பெப்ரவரி முதலாம் திகதி பாரதிய ஜனதாக் கட்சியில் இணையப் போவதாக அறிவித்துள்ளார்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சரவையில் திருநாவுக்கரசு அமைச்சர் பதவி வகித்தார். ஜெயலலிதா அரசியலில் அறிமுகமானபோது அவருக்கு ஆதரவளித்த திருநாவுக்கரசு, பின்னர் அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவை ஆரம்பித்தார். (ஒ-9)

# கல்வியியல் கல்லூரி மாணவருக்கு பாடசாலைகளில் உள்ளகப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் உள்ளகக் கற்பித்தல் பயிற்சிக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

கற்பித்தல் பயிற்சிக்காகவே இவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அல்ல என்றும் -

பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

வாரத்தில் 15 பாடபோதனைகளில் மட்டுமே அவர்கள் ஈடுபடுவர் என்றும் -

- கல்லூரியில் முழுமையான பயிற்சிக்காலத்தை அவர்கள் பூர்த்தி செய்த பின்னரே அவர்களுக்கு நிரந்தர நியமனம் பாடசாலைகளில் வழங்கப்படும என்றும் - அவர் கூறினார். (ஐ-3)

# இரத்ததானம் செய்து வரும் யாழ். பல்கலை. மாணவர்கள்!

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஆதரவுடன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் பல்கலைக்கழக மாணவர்கள் இரத்ததானம் செய்து வருகின்றனர்.

குடாநாட்டில் திடீரெனப் பரவிவரும் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன் இரத்தமே ஏற்றவேண்டியிருப்பதால், இரத்தம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்கள் இரத்ததானம் வழங்கி வருகின்றனர்.

கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர் இரத்ததான நிகழ்வில் இதுவரை 20இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.

இதேவேளை -

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையைத் தீர்க்கும் முகமாக இரத்ததான முகாம் ஒன்றை நடத்தி, இரத்தத்தைச் சேகரிக்கவும் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துவருவதாக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளர்களுக்கு உடன் இரத்தம் தேவைப்படுவதாகவும் -

காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேமித்து வைக்கப்பட்டுள்ள இரத்தத்தை ஏற்ற முடியாது என்றும் - மருத்துவபீட மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

'சி' தரத்தில் சித்தியடைந்தவர்களையும், 'சி' தரத்தில் பரீட்சையில் தோற்றியோர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி கேட்டுள்ளார். (ஐ-3)

## வண்ணை சிவன்கோயில் மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் இன்று அதிகாலை 6 மணியளவில் ஆரம்பமாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகளில் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ நா.மகாதேவக்குருக்கள் சர்வபோதகராகவும், தேவஸ்தான குரு பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும் கடமையாற்றுவார்கள். இக் கும்பாபிஷேகத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட பஞ்சதள இராஜகோபுரத்துக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (க)

# கடலுணவுகளை பதனிடும் வசதிகள் இங்கு இல்லை

## இதனால் ஏற்றுமதி செய்யமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஜன.21

கடலுணவுகளை, வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கு எடுத்துச்செல்வதற்கான அனுமதியை விமானப் படையினர் வழங்கியுள்ளபோதிலும் அவற்றைப் பதனிட்டுப் பாதுகாத்து ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான இயந்திரசாதனங்கள் மற்றும் உற்பத்தி நிலைய வசதிகள் இல்லாத காரணத்தால் அதனை மேற்கொள்ள முடியவில்லை.

இவ்வாறு, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் -

வடபகுதியிலிருந்து பெறப்படும் கடலுணவுகளில் மேலதிகமானவற்றை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்ய முடியும். ஆயினும் அவற்றைப் பதனிடுவதற்குத் தேவையான பனிக்கட்டிகளை உற்பத்தி செய்யும் நிலையம், குளிர்சாதன இயந்திர வசதிகள் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையங்கள் போன்றன இல்லாமையினால் கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனினும் விரைவில் இக்குறைபாடுகளைக்களைந்து, கடலுணவுகள் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப் பல தரப்புக்களும் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

# காணாமற்போனவரின் சம்பளத்தை மனைவிக்கு வழங்க உதவுங்கள்!

## அமைச்சர் ஜயலத்துக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜன.21

காணாமற்போனதாகக் கூறப்படும் ஒருவரின் சம்பளப் பணத்தை அவரது மனைவியிடம வழங்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவுக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றூழியரான சிவசம்பு விஜயகாந்தன் என்பவரது சம்பளமே -

அவர் காணாமற்போன திகதியல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இடைநிறுத்தப்பட்டுள்ள திகதியில் இருந்து அவருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தையும் இனி வரும் காலத்தில் அவருக்கு வழங்கப்படவேண்டிய சம்பளத்தையும் அவரது மனைவி பெற வழிசெய்து தருமாறுகோரி -

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தால் ஆரியகுளம் சந்தியில் உள்ள நாகவிகாரையின் விகாராதிபதி ஊடாக இந்த 'மகஜர் அமைச்சர் ஜயலத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திருமணம் செய்து சிறிது காலத்திலேயே தனது கணவர் காணாமற் போனதால், அன்றாட வாழ்வுக்கே பல பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்திக்கும் அவரது மனைவியிடமே சம்பளத்தை வழங்குமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதங்கள் மூலம் கோரியிருந்ததாகவும் -

இதுவரை அதற்கு சாதகமான பதில் கிடைக்காததாலேயே புதிய அமைச்சருக்கு மகஜர் அனுப்பியிருப்பதாகவும் -

இதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து மேற்கொண்டு அஹிம்சை வழியில் தாம் போராடியே அந்தச் சம்பளப் பணத்தை அவருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டி ஏற்படும் என்றும் - காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது. (க-6)

## மடுத்திருப்பதிக்கு மீண்டும் மின்சாரம்

எதிர்வரும் 28 ஆம் திகதி மடுத் திருப்பதிக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்கப்படும். புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அகதிகள் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

மின் இணைப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

நீண்டகாலமாக இருளில் மூழ்கியிருந்த மடுப்பகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்குவதற்கான வைபவம் மடுத்தேவாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் அரசாங்க அதிபர் அலுவலகம் செய்து வருகின்றது.

அமைச்சருடன் பல அரசியல் பிரமுகர்கள், தொண்டர் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்துகொள்வர். (ஐ)


## கண்ணீர்ப் பூக்கள்

மலர்வு 1930 - 04 - 03



உதிர்வு 2002 - 01 - 18

வேலணை ப.நோ.கூ.ச. பொது முகாமையாளர்
**திரு.ச.விநாயகமூர்த்தி** அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி சபாலிங்கம் வாலாம்பிகை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் திருப் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

சாய்ராம் தொலைத்தொடர்பு நிலையம்,
*வங்களாவடி, வேலணை.*
கண்ணன் வெதுப்பகம்,
*பழைய பஸ் கொம்பனி, வேலணை.*

(C/20401)



## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

### அவசர ஆலோசனைக் கூட்டம்

காலம்: நாளை (22-01-2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு

இடம்: *தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம்*

தலைவர்: திரு.தி.மகேந்திரராசா (உபதலைவர்)

இக்கூட்டத்தில் தொகுதிக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், முக்கியஸ்தர்கள் முன்னைய வேட்பாளர்கள் மட்டும் கலந்துகொள்ளவும்.

(97362) - அ.இ.த.கா.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா பொன்னம்மா

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா பொன்னம்மா நேற்று (20-01-2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சு.கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவரும் முன்னாள் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும்) அவர்களின் துணைவியாரும் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி க.நடராஜதிலகரட்ணத்தின் தாயாரும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வேலுப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி கிருஸ்ணகுமார் நிர்மலதிலகேந்திராவின் பேர்த்தியும் சு.கிருஸ்ணகுமார் (வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, உதவிக்கல்விப் பணிப்பாளர்), சுப்பிரமணியம் குலஞ்ஞானேஸ்வரி அவர்களின் மாமியாரும் சு.கதிரமலை, க.வேலுப்பிள்ளை, தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மாணிக்கம், இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் விமலநாதன் (பொறியியலாளர், லண்டன்) பெரிய தாயும் தணிகைக்குமரன், ஆரணி, சரவணன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2002) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.சுப்பிரமணியம்
(அதிபர், நுணசை மகா வித்தியாலயம், மாதகல்)

*நாவலர் வீதி, மாதகல்.* (97364)

## செல்லத்துரை கனகரத்தினம்

**(இளைப்பாறிய லிகிதர், உ.அ.அ.அலுவலகம், யாழ்ப்பாணம்)**

சங்கானை நிகரை வயிரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகரத்தினம் நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரங்கல் நிகழ்வுகள் பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

தகவல்:
செ.சுகுணன்,
'கோலம் சில்க்ஸ்',
சங்கானை.

*செல்வநாதன் சுகுணன், மாளியாவத்தை, சங்கானை.* (C/20402)

## விசுவநாதர் மயில்வாகனம்

**(ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர் - கல்வி வெளியீட்டுத்திணைக்களம்)**

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.வி.மயில்வாகனம் நேற்றுமுன்தினம் (19.01.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காந்திமதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி லோகேஸ்வரன் (முன்னாள் ஆசிரியை - புத்தூர் சோமஸ்கந்தா) மற்றும் Dr மனோன்மணி (U.K.), சுதந்திரநாதன் (பொறியியலாளர் - கப்பல் கூட்டுத்தாபனம்), திருமதி புனிதவதி சீவாஅமிர்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கோப்பாய் நாவலர் வித்தி.), காந்திமதிநாதன் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதா - லோகேஸ்வரன் (சட்டத்தரணி), நிரஞ்சலாதேவி (கொழும்பு), சீவாஅமிர்தம் (லிகிதர் - இ.போ.ச., கோண்டாவில்), கமலநாயகி (ஆசிரியை - இராஜகிரிய) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவாகினி (நியூசிலாந்து), எனருணன் (சிங்கப்பூர்), கோபிநாத் (ஹொங்கொங் வங்கிக் கிளை - கொழும்பு), பிரேம்நாத் (சென்.தோமஸ்), ருஷாந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கமலநாத் (கொழும்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் சரக்ஷாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2002.01.20) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
அ.சீவா அமிர்தம்
(மருமகன்)

*57, செட்டித் தெரு, நல்லூர்.* (97361)

## திருமதி இராமலிங்கம் சின்னாச்சிப்பிள்ளை

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் சின்னாச்சிப்பிள்ளை நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தம்பித்துரை, இராசதுரை (சுவிஸ்), செல்லத்துரை (லண்டன்), காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, ஜெயலட்சுமி, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற பரஞ்சோதிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2002) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் மல்லாகம் பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
இ.தம்பித்துரை
(மகன்)

*வீரபத்திரர் கோயிலடி, மல்லாகம்.* (97360)

உதயன்

## சந்திரிகாவின் சந்தேகம்...!

முழுநாட்டையுமே அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கும் இந்த இனப்பிரச்சினைக்கு, அமைதித் தீர்வுகாண தற்போது எடுக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள் குறித்து நாட்டின் தலைவி சந்திரிகா குமாரதுங்கவுக்கு சந்தேகம் - முழுச் சந்தேகம்.

சமாதான நடவடிக்கைகளின் போது தமிழர் தரப்பில் ஏகபிரதிநிதிகளாகப் பங்குபற்றப்போகும் விடுதலைப் புலிகளோடு இந்த முயற்சியில் பழகுவது குறித்து அதிக எச்சரிக்கையுணர்வு அவசியம் என்று ஜனாதிபதி காட்டிக்கொண்டாலும், உண்மையில் இது விடயத்தில் அவரிடம் பிரதிபலிப்பது எச்சரிக்கை உணர்வு அல்ல; சந்தேக உணர்வே.

கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு அவர் வழங்கிய பேட்டியில் அவரது சந்தேக உணர்வு - ஐயப்போக்கு - அப்படியே வெளிப்படத் தவறவில்லை.

தன்னுடைய அரசியல் எதிர்காலம் குறித்து மட்டுமல்ல; தன்னுடைய இருப்புக் குறித்தே அவருக்கு இப்போது அதிக சந்தேகம்.

விடுதலைப் புலிகளால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அவர் அஞ்சி, தமது வாழ்வை - செயற்பாட்டை - அன்றாட நடவடிக்கைகளை - தனது ஜனாதிபதி மாளிகைக்குள் அவர் சுருக்கிக்கொண்டதில் நியாயம் இருக்கலாம்.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னரும்சரி (டிசெம்பர் 5ஆம் திகதி முன்னரும்சரி), பின்னரும்சரி இந்த ஆபத்தில் மாற்றமில்லை என்று கொள்வதைத் தப்புக் கூறமுடியாது.

ஆனால் டிசெம்பர் 5ஆம் திகதிக்குப் பின்னர் தமது பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தல் பத்து மடங்கு அதிகரித்திருப்பதாக அவர் கூறுவது புலிகளைமனதில் கொண்டு அல்ல என்பதையும், ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி தனது உயிருக்கு உலை வைத்துவிடலாம் என்ற அச்சம் - பயம் - பீதி - சந்தேகம் - அவரது மனதில் ஆழ ஊன்றிப் பதிந்துள்ளது என்பதையும் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

பாதுகாப்பு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வசம் இருப்பதையும் இந்திராகாந்தி தனது பாதுகாப்பு பிரிவினராலேயே கட்டுக் கொல்லப்பட்டார் என்பதையும் சேர்த்து அவர் சுட்டிக்காட்டியிருப்பது இதை ருசுப்படுத்த போதுமானதாகும்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் உடனடியாகத் தடை ஏதும் இன்றி - தன்னிச்சையாகவே - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி விடுவார் என்ற யதார்த்தம் சந்திரிகா குமாரதுங்கவுக்குப் புரிந்து கொண்டதால் வந்துள்ள சந்தேகம் இது.

தனக்குக் கீழ் இருக்கும் தன்னுடைய நாட்டு அரசே தனது உயிருக்கு உலை வைத்துவிடலாம் என்ற அச்சம் -

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு குற்றவிசாரணைப் பிரேரணையைக் கொண்டுவந்து தனது பதவியைப் பறித்துத் தன்னை வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்ற ஐயம் -

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தனது கோஷம் செல்லாக் காசாகிப்போக, சமாதானத்திற்கான யுத்தநிறுத்தம் என்ற பிரதமர் ரணிலின் முயற்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தந்து, அரசியலில் ரணிலின் செல்வாக்கை உயர்த்தி விடுமோ என்ற சந்தேகம் -

சமாதானப் பேச்சு என்று கூறி அமைதி முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்க முன்வந்திருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஈழத் தமிழரின் அரசியலில் மட்டுமல்லாமல், பிரதேசக் கட்டுப்பாட்டிலும் பெரும் சக்தியாக விஸ்வரூபம் எடுத்துவிடுமோ என்ற பயம் -

இவ்வாறு பல்வேறு சந்தேக - ஐய - உணர்வுகளுக்கு நடுவில் நின்று அல்லாடிக்கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க. அதை அவரது பத்திரிகைப் பேட்டி தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அரசும், புலிகளும் பேச்சு நடத்தி, இணக்கமான ஒரு தீர்வுக்கு வந்தாலும், நாட்டின் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது சந்தேக உணர்வும் அத்தீர்வை நடைமுறைப்படுத்தவிடாமல் குறுக்கே வந்து தடுத்துவிடுமோ என்ற சந்தேகம் இப்போது மக்களுக்கு எழத் தொடங்கிவிட்டது.

# கசிப்பு விற்ற கட்டைப்பிராய் வாசிக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,ஜன.21

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக யாழ்நீதிவான் நீதிமன்றத்தால் ஏற்கனவே 40ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்த ஒருவர் மீண்டும் கசிப்பு விற்பனை செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதால் அவருக்கு நீதிவான் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்குமாறு உத்தரவிட்டார்.

கட்டைப்பிராய், கோப்பாயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நாகேந்திரம் என்ற குற்றவாளிக்கே கடந்த வாரம் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

இதேவேளை -

கடந்த வருடத்தில் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் மட்டும் 290 கசிப்பு வழக்குகள் பொலிஸாராலும், மதுவரித் திணைக்களத்தினாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன என்று புள்ளிவிவரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

சட்டவிரோதமான மதுபான விற்பனை தொடர்பான வழக்குகளில் நீதிமன்றத்தால் 13 லட்சம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் -

சுமார் 4 லட்சம் ரூபா தர்மப் பணமாகச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்ததாக அந்த விவரங்கள் தெரிவிக்கின்றன

இந்த வழக்குகள் குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த குறிப்பிட்ட சில நபர்களுக்கு எதிராகவே தொடர்ந்து பல தடவைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(க-6)

## நாட்டு நடப்பு

### ஆச்சி படும் பாடு - II

"முத்தம்மாப் பாட்டி ஏன்ரி
மூலைக்கை முனு முனுக்குது?"
"பெத்துவந்த பேத்தி பெயர்
பொக்கு வாய்க்கை பூராதாம்
'டிலுக்ஸி' என்று பாட்டிசொல்ல
'டிக்கி' என்று கேட்குதாம்
அடிக்கடி பால் பருக்க
ஆச்சி கையும் நடுங்குதாம்
பிடிக்க ஒரு வேலையாள்
பேப்பரிலை இன்று போட்டாச்சாம்
இடைக்கிடை வேலைக்காரி கூட
இங்கிலீக பேச வேனுமாம்"

*- விகடகவி.*

### நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

# ஊழியர்கள் பலருக்கு மீண்டும் வந்துள்ள இடமாற்ற கடிதங்கள்!

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்கள் பலருக்கு மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றக் கடிதங்கள் வந்துள்ளன.

சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு தனித்தனியாக இடமாற்றக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்தவருடம் ஒகஸ்ட் மாதம் இவ்வாறான இடமாற்றக் கடிதங்கள் வந்தபோது அவர்கள் அனைவரும் அப்போதைய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது இடமாற்றங்களை ரத்துச்செய்யுமாறு கோரி மகஜர் ஒன்றினைக் கையளித்திருந்தனர்.

டக்ளஸ் தேவானந்தா தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்திருந்தார். அதைத் தொடர்ந்து அவர்களுக்கான இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது நான்கு மாதங்களின் பின்னர் இந்த ஊழியர்களுக்கு மீண்டும் வெளிமாவட்டங்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் அந்த ஊழியர்கள் மிகவும் விரக்தியடைந்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக விரைவில் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருப்பதாக ஊழியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (க-4)

### யாழ்.ஆஸ்பத்திரியில் 17 தினங்களில்

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 8 பேர் சிகிச்சை பயனளிக்காது மரணம்

### வருட ஆரம்பத்தில் அவலம்

யாழ்ப்பாணம்,ஜன.21

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் கடந்த 17ஆம் திகதி உயிரிழந்தனர்.

இருபாலையைச் சேர்ந்த மபசுபதி (வயது-41) என்ற பெண்மணி கடந்த 15ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த தம்பிராசா திகழொளிபவன் (வயது-27) என்ற இளைஞன் கடந்த 9ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 9 தினங்களின் பின்னர் (17ஆம் திகதி இரவு) சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

கடந்த 17 நாள்களுக்குள் காய்ச்சலால பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 8 பேர் சிகிச்சை பயனளிக்காது 'செப்ரிசீமியா' நிலைக்கு ஆளாகி உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் சிலருக்கு என்ன காய்ச்சல் என்பது கண்டுபிடிக்கப்படாத நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-6-ரி)

### அம்புலன்ஸ் இருக்கிறது; ஆனால் சாரதி இல்லையே!

# சங்கானை ஆஸ்பத்திரியின் அவசர நோயாளரை இரவில் யாழ்.எடுத்துச்செல்ல முடியாத நிலை

### கடந்த இரு வாரங்களுக்குமுன் பெண் ஒருவர் அநியாயமாக மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.21

சங்கானை மாவட்ட வைத்தியசாலையில் இரவு நேரங்களில் அனுமதிக்கப்படும் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரமுடியாத அவலநிலை காணப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் அம்புலன்ஸ் உள்ளபோதிலும் இரவு நேரக் கடமைக்கென சாரதி எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் வீணான உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயநிலை நீடிக்கிறது.

- இவ்வாறு சங்கானை பிரதேச மக்கள் சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளனர்.

இந்த இக்கட்டான நிலைமையை தெளிவுபடுத்தி சங்கானைப் பிரதேச வாசிகளின் கையொப்பங்களுடன் மகஜர் ஒன்றும் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சங்கானை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அவசர நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். பகல் வேளையில் அதற்குப் பிரச்சினை இல்லை. பகல் நேரக் கடமைக்கு ஒரு சாரதி இருக்கின்றார். அவர் ஒருவர் மட்டுமே அம்புலன்ஸ் சாரதி. இவர் லீவில் சென்றால் அந்தப் பணியைச் செய்ய ஆள் இல்லை. இரவுக் கடமைக்கும் சாரதி இல்லை.

இதனால் அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

கடந்த 30ஆம் திகதி இரவு சங்கானை வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளி ஒருவரை அவசர சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுமாறு வைத்தியர் பணித்தார்.

ஆனால் நோயாளியை ஏற்றிச் செல்ல அங்கு அம்புலன்ஸ் சாரதி இருக்கவில்லை. அவர் பகல் கடமை முடித்து வீட்டிற்குச் சென்றிருந்தார். இந்தத் தகவலை ஊழியர்கள் டாக்டருக்குத் தெரியப்படுத்தினர்.

அந்த அகால வேளையில் தனியார் வாகனங்களையும் வாடகைக்குப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. அதனால் அந்தப் பெண்மணி அவசர சிகிச்சை வழங்கப்படாமலேயே சங்கானை வைத்தியசாலையில் உயிரிழந்துவிட்டார்.

இத்தகைய உயிரிழப்புகள் எதிர்வரும் காலங்களில் தொடரக்கூடாது. ஆதலால் உடனடியாக இந்த வைத்தியசாலைக்கு மேலும் ஒரு சாரதியை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதேசமயம் பகலிலும் இரவிலும் சாரதி ஒருவர் கடமைக்கு இருப்பது கட்டாயப்படுத்தப்படவேண்டும் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் சங்கானை மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கும், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும், இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(க-6)

## திரைப்படத்துறை விரிவுரை

யாழ்ப்பாணம்,ஜன.21

"சலனசித்திரம்" அமைப்பு யாழ். ஆரியகுளம் புதிய உயர் கலலூரியில் நடத்திவரும் திரைப்படத் தொழில்நுட்பு வகுப்புத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திரைப்பாடல் மற்றும் திரை இசை சம்பந்தமான விரிவுரை இடம் பெறவுள்ளது. (க-9)

## நாளை

தை 09
செவ்வாய்க்கிழமை
(22-01-2002)
திதி : அட்டமி
முற்பகல் 9.16 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
காலை 7.58 வரை.
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 3.35 - 5.05
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

முன்னேற வேண்டுமனால் கோபத்தைக் கைவிடுங்கள். ஆத்திரமடைந்துள்ள மனிதனால் தெளிவாகச் சிந்திக்க முடியாது.



வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்... சரணையுடன் நடத்தப்படும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மக... விருத்தி பயிற்சி நிலைய திறப்புவிழா கடந்த சனிக்கிழமை காரைநகரில் பெற்றது.

பிரதம விருந்திரனராகக் கலந்து கொண்ட வலி.வடக்கு பிரதேச செய... திருமதி ப.திலகநாயகம்போல் நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். அருகில் தையல் போதனாசிரியை செல்வி எஸ்.மைதிலி, ஊர்காவற்றுறை, நெடுந்தீவுப் பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், காரை. வடக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.சண்முகசுந்தரம் ஆகியோர் உள்ளனர். *(படம்: காரைநகர் செய்தியாளர்)*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**18.01.2002ஆம் திகதிமுதல்**
**பனை அபிவிருத்திச் சபையின்**
**புதிய தலைவராகப் பதவியேற்றிருக்கும்**
**திரு.பொன்னையா சிவபாதம்**
**அவர்களை வரவேற்று அவர் பணி சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்க
(97309) பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## 2002ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும்
## நிர்வாகசபைத் தெரிவும்

நாள் : **23-02-2002 சனிக்கிழமை**
நேரம்: பிற்பகல் 2.00 மணி (இலங்கை நேரம்)
இடம்: **யாழ்.வணிகர் கழகப் பணிமனை**

***அன்பான வேண்டுகோள்:***

1) ஆராயவேண்டிய விடயங்க்ள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 08-02-2002இற்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.
2) அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும், தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவார்கள்.
3) நிகழ்ச்சி நிரல் சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். சகல கழக அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

(C/20389)

# கொழும்பில் சனியன்று நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.21

இலங்கை வங்கியில் அலுவலக உத்தியோகப் பயிற்சியாளர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான முன்னோடி நேர்முகத் தேர்வு (Preliminary Interview) எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி 'மனேஜ்மன்ற் சிஸ்டம்ஸ் லிமிடெட்' யாழ்ப்பாணத்தில் நடத்திய எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கே நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு சகல மூலச்சான்றிதழ்களையும் எடுத்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ம-9)

# உரும்பிராயில் நாய்கள் அழிப்பு

வலி.கிழக்கு,ஜன.21

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளை மறுதினம் புதன்கிழமை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையினை கோப்பாய் பொதுச் சுகாதாரப் பகுதியினரும், வலி.கிழக்கு பிரதேச சபையினரும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் வசிப்போர் அன்றைய தினம் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கே.குகதாசன் தெரிவித்துள்ளார்.

(ஜ-180)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY



BIRTHDAY

## செல்வன் ஹரீஸ்

வண்ணார்பண்ணை, நாவலடி வீதி, பேச்சிஅம்மன் கோயிலடியைச் சேர்ந்த திரு.திருமதி **மகேந்திரன் - மனோரஞ்சினி** தம்பதியினரின் செல்வப் **புதல்வன் ஹரீஸ்** தன்து முதலாவது பிறந்தநாளை இன்று (21.01.2002) திங்கட்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். ஹரீஸை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழவேண் டும் என வாழ்த்துகின்றார்கள்.

*17/24, நாவலடி வீதி,*
*பேச்சியம்மன் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.*

(97308)

தகவல்:
மகேந்திரன் (அப்பா)
(துரைராசா கடை)


## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்



**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ. 187,350/-ல் இருந்து மேல் (GST உட்பட)



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:
- 1748,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146, 08-238133-5
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ. பே: 041-27488, 041-28488, 041-28999
- நீதல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997, 063-23662
- 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-22676
- தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389

இலவசம்!
ஒவ்வொரு திடமான பதிவுக்கும்
பஜாஜ் முச்சக்கர வண்டி
ஒரு சோடி பக்கத் திரைகளுடன் ஒரு லீட்டர் சர்வோ என்ஜின் எண்ணை கான் ஒன்றும்
இக்கொடுப்பனவு 2002 ஜனவரி 7 முதல் 31 வரை


மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்______
விலாசம்______
சேவை நிலையம்______ தொலை பேசி______

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tredlanka





புனரமைப்புச் செய்யப்பட்ட கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் மண்டபம் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி மற்றும் பல நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள் வர்த்தகப்பிரமுகர்கள் காணப் படுகின்றனர். கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் உருவப்படத்துக்கு யாழ்.அரச அதிபர் மலர்மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள் : பொ. இராஜேஸ்வரன்)*

### காணாமற்போனோர் தொடர்பான
# விசாரணைக்கு புதிய பொலீஸ் குழு; 10 பேரின் உறவினர்களுக்கு அழைப்பு

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பில் இருந்து புதிய பொலீஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இவர்கள் தமது முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக பின்வரும் 10 பேரின் உறவினர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ துரைராசா பாலச்சந்திரன் (கோவை இல. பி.ஐ.9/210), பண்டாரக்குளம், நல்லூர். ரி.சுகந்தி(சாட்சி).

★ நவரத்தினராசா தேவபாலன் (கோவை இல. பி.ஐ.239), இல.674, கண்டி வீதி, அரியாலை. நடராசா நவரத்தினராசா, ந.குமுதினி(சாட்சிகள்).

★ சுப்பிரமணியம் இராசலிங்கம் (கோவை இல.பி.ஐ.9/9), சுன்னாகம். விஸ்ணு, செல்வராசா(சாட்சிகள்).

★ கே.அன்பழகன்(கோவை இல. பி.ஐ.435), பிரதேச செயலக வீதி, சுன்னாகம். தர்மவதி, ஈசன்(சாட்சிகள்).

★ சந்திரசேகரன் லோகேஸ்வரன் (கோவை இல. பி.ஐ.9/206), ஆனந்தா ஸ்ரோர்ஸ் இணுவில் வீதி, மானிப்பாய். செல்வம் சந்திரசேகரன் (சாட்சி).

★ முருகன் ஜெயரட்ணம், முருகன் சிவராசா (கோவை இல.பி.3), மறவன்புலோ, சாவகச்சேரி. (சாட்சிக்கு உறவினர்கள் வரவும்)

★ யூலியன் பெனாசியஸ் (கோவை இல. பி.ஐ. 433), இல.7/7 மத்திய வீதி, குருநகர். ஆன் யூலி, ஆன் அனிடா, ஆன் அப்பிலீன்(சாட்சிகள்),

★ சரவணமுத்து ஸ்ரீதரன்(கோவை இல.பி.ஐ.90), பழைய வாய்க்கால், மிருசுவில். (சாட்சிக்கு உறவினர்கள் வரவும்.)

★ சுப்பிரமணியம் ஜெயவதனன் (கோவை இல. ஐ.ஆர்.64/99), அச்சுவேலி. சுப்பிரமணியம் தங்கப்பிள்ளை (சாட்சி)

★ பி.கிருபாகரன்(கோவை இல. பி.4/66), நாவற்குழி மேற்கு, கைதடி. (சாட்சிக்கு உறவினர்கள் வரவும்)

(ஜ-4-8)

### மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள
# மீசாலைப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

தென்மராட்சி,ஜன.21

கொடிகாமத்தில் இயங்கும் ஜெனரேற்றர் மூலம் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள மீசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இப பகுதியில் சேதமடைந்துள்ள மின் கம்பிகளைத் திருத்தும் பணியினை இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிப் பிரிவினர் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றனர்.

மீசாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள பகுதிகளின் வதிகளை துப்புரவு செய்யும் பணிகள் அடுத்தவாரம்முதல் சாவகச்சேரி நகர சபையினால் மேற்கொள்ளப் படவுள்ளன. அத்துடன் இப்பகுதியில் உள்ள கிணறுகளை இறைத்துத துப்பரவாக்கும் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# முன்னாள் அமைச்சர் மேர்வினின் உதவியாளர் சுட்டுக் கொலை!
## வெள்ளவத்தையில் சம்பவம்

கொழும்பு,ஜன.21

வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் அடையாளந் தெரியாத ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் உதவியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதாள உலகக் கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் -

தாக்குதல் நடத்த வந்தவர்கள் வெள்ளை நிறக் காரைப் பயன்படுததியுள்ளதாகவும் -

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் நடந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து வெள்ளவத்தைப் பகுதியில் சிறிது நேரம் பெரும் பதற்றம் நிலவியது.

(ம-6-9)

# பாண் விநியோகிக்கும் முறைகளில் சுகாதாரம்பேண மேலும் அவகாசம்

குடாநாட்டில் பாண் விநியோகிக்கப் படும் போது சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பேணுவதற்கு வழங்கிய கால அவகாசத்தை எதிர்வரும் 31ஆம் .திகதி வரையிலும் நீடித்து யாழ்.நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

பாண் விநியோகத்தில் சுகாதார முறைகளை உதாசீனப்படுத்தியமை தொடர்பான வழக்கில் 20ஆம் திகதிக்கு முன்னர் பாண் விநியோகத்தில் சுகாதார விதிகளை பேண நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா கடந்த 10ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தார்.

இந்தக் காலஅவகாசம் போதாது இருப்பதால், எதிர்வரும் 31ஆம் திகதி வரை அதனை நீடிக்கும்படி பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் சார்பில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவிடம் வேண்டுகோள்விடப்பட்டது. இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிவான் கால நீடிப்புத் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துமாறு நீதிமன்றம் பதிவாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார். (ஒ-6-ரி)

## 'காலசுரபி' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.பல்கலைக்கழக வரலாற்று கழகத்தினரால் வெளியிடப்பட்டுவரும் 'காலசுரபி' நூலின் மூன்றாவது இதழ் வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டுவிழாவில் ஆசியுரையை துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், வாழ்த்துரைகளை கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் நிகழ்த்துவர்.

நூலின் வெளியீட்டுரையை தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்த முதல் பிரதியை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து நூலின் ஆய்வுரையை நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா நிகழ்த்துவார். (க-6-ரி)

## கல்வியங்காடு வர்த்தகருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.21

காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் கடந்தவாரம் 5 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கல்வியங்காட்டுப் பகுதியில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறித்த வர்த்தகரின் கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருள்ளைக் கண்டு பிடித்தார்.

இதனையடுத்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து குற்றத்தை ஒப்புக்கொண்ட வர்த்தகரை 5 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (க-6)

# யுத்த நிறுத்தத்தின் மத்தியிலும் மக்களை வாட்டும் விலை உயர்வு

## குடாநாட்டு வர்த்தக சமூகம் மனம் திருந்திட வேண்டும்

**செய்திக் கட்டுரை**

நாட்டில் அமைதி நிலவும் என்ற எதிர்பார்ப்புடன் கூடிய சுமுகமான சூழ நிலையில் எமது வாழ்க்கை வளம் பெறும் என்ற நம்பிக்கையுடன் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் வாக்களித்த மக்கள் மீண்டும் தாம் ஏமாற்றப்பட்டு விடுவோமோ என அஞ்சத்தொடங்கியுள்ளனர். குடாநாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தினசரி உயர்ந்து கொண்டே செல்வதே அதற்குக் காரணம் குடாநாட்டில் உள்ள வீடுகளில் விளக்கேற்றக்கூட மண்எண்ணெய் கிடைக்காது தவிப்பதை உணரவில்லை. ஒரு சில பொருள்களை பொதுமக்கள் கண்ணால் கூடக் காணமுடியாத சூழ்நிலை வேறு நிலவுகிறது. மண்எண்ணெய், சீனி, கோதுமைமா போன்றவற்றின் தட்டுப்பாடும் அவற்றின் விலைகளும் ஏழைமக்களின் வயிற்றில் புளியைக் கரைக்கின்றன். அரசின் பொருளாதாரத் தடைச் சட்டம் அமுலில இருந்த போது, வடக்கு - கிழககில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எமது மக்களுக்கு ஏற்படாத அவலம் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளதாக புதிய அரசு அறிவித்த பின்னர் - இரு தரப்பும் யுத்த நிறுத்தம் அறிவித்துள்ள இந்தக் காலப் பகுதியில் - ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

அன்றாடம் கூலி வேலைசெய்து பிழைப்போரின் வீடுகளில் தற்போது தினசரி ஒரு தடவை மட்டுமே சமையல் நடைபெறுகிறது. பொருள்களின் விலைகள் வானை முட்டும் நிலையில் கூலி வேலைக்கு போகும் மக்களின் வாழ்க்கை இதைத் தவிர வேறு எப்படி அமையும்?

இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட எமது மக்கள், போருக்கு தமது சொத்துக்களை இரையாக்கி விட்டு இன்று பசி, பட்டினியுடன் அலலாடுகிறார்கள். எமது மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்களோ அரச உயர் அதிகாரிகளோ இந்த அவலத்தை உணர்வதாக இல்லை.

குடாநாடு மற்றொரு சோமாலியாவாக உருமாறிக்கொண்டு இருக்கின்றது. ஆனால் எமது மக்களுக்காக இரக்கப்படுபவர்கள் எவருமே இங்கு இல்லை.

மண்எண்ணெய்த் தட்டுப்பாட்டை நீக்க நீதிமன்றம் தலையிட்டு பணிப்புரைகளை விடுத்துள்ளபோதிலும் அதிகாரிகளின் மந்தமான செயற்பாடோ என்னவோ மண்எண்ணெய்த் தட்டுப்பாடு குடாநாட்டில் இன்னமும் தொடரத்தான் செய்கிறது.

நாட்டில் சமாதானத்திற்காக குரல்கொடுப்பவர்கள் நமது மக்களின் பசியைப் போக்க சிந்திப்பதாக இல்லை. சமாதானத் தீபத்தை ஏற்றுவோம் என்று முழங்குபவர்கள் குடாநாட்டில் உள்ள வீடுகளில் விளக்கேற்றக்.கூட மண்எண்ணெய் கிடைக்காது தவிப்பதை உணரவில்லை. குடாநாட்டில் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் மண்எண்ணெய் 60 ரூபா, பெற்றோலின் விலை 130 ரூபா இந்த நிலையில் பரீட்சைகளுக்காகப் படிக்கும் மாணவர்கள் மின்சாரமும் சீராக வழங்கப்படாமலும் விளக்குகளுக்கு மணஎண்ணெயும் கிடைக்காமலும் தவிக்கிறார்கள். இவை எமது மக்களுக்கு புதியவை என்பதில்லை. ஆனால் பெரிய எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு மீண்டும் கிடைத்துள்ள ஏமாற்றம் இது என்பதை மறுக்கமுடியாது.

கடந்த காலங்களில் குடாநாட்டுக்கு வந்தது போன்றே உணவுக் கபபல்கள் தற்போதும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அதில் ஒரு மாற்றம்; முன்னர் இருந்த ஆபததான யுத்த சூழ்நிலை இன்றி அமைதியான சூழலில் அவை வந்து சேரக்கூடியதாக உள்ளன. அப்படியிருந்தும் பொருள்களின் விலைகள் மட்டும் ஏன் இப்படி ஆனைவிலை, குதிரை விலையாக உயர்ந்து கொண்டே செல்கின்றன? என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

இதற்கு பதில் தர வேண்டியவர்கள் யார்? அவர்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றார்கள்? குடாநாட்டுக்கு தரைவழிப்பாதை திறக்கப்பட வேண்டும் என்று நினைப்பவர்கள் எமது மக்களின் இந்த வேதனையை குறைக்க முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தியாவசிய பொருள்கள அனைத்தும் கட்டுப்பாட்டு விலையில் தாராளமாக கிடைக்க வழிவகை செய்யவேண்டும். இதில் அனைத்துத் தரப்பினரும உதவவேண்டும் என்பதே குடாநாட்டு மக்களின் ஏகோபித்தகுரலாகும்.

குடாநாட்டில் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டு நிலைமையைப் பயன்படுத்தி தமது இலாபத்தையே நோக்கமாகக் கொண்டு பொருள்களை பதுக்கிவைப்பதிலும், விலைகளை உயர்த்துவதிலும் அக்கறை காட்டும் வர்த்தக சமூகம் சமூக நலனுடன் நியாய விலையில் பொருள்களை விற்க முன்வர வேண்டும்.

கூட்டுச் சேர்ந்து வர்த்தகப் பெருமபுள்ளிகள் தாமே உருவாக்கிய செயற்கைத் தட்டுப்பாடுகளை நீக்க தமது வீடுகளிலும், களஞ்சியங்களிலும் பதுக்கிவைத்திருக்கும் பொருள்களை விற்பனைக்கு கொண்டு வர வேண்டும்.

வர்த்தகர்களுடன் கூட்டுச் சேர்ந்து லாபம் பெற முயலும் சில அதிகாரிகள் இதய சுத்தியுடன் சேவையாற்ற வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலத்தின் தேவைஉணர்ந்து - மக்களுக்காக சேவையாற்ற கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - பதுக்கல் வியாபாரத்தையும், கள்ளச் சந்தையையும் இல்லாதொழிக்க கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக மாறுபட்ட அரசியல் கொள்கைகளுடன் குடாநாட்டில் வலம் வரும் அரசியல் கட்சிகள் அரசியல் இலாபம் தேடுவதை நிறுத்திவிட்டு, அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விலையேற்றத்தை குறைக்க நேரடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்லும் இந்த சந்தர்ப்பத்தில் அதனைத் தடுத்து மக்களைக் காக்கவும் -

இளைய தலைமுறையை விடகாத்திரமான ஆரோக்கியமான சமூகமாக மாற்றியமைக்கவும் -

அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும், வர்த்தகர்களும் ஒற்றுமையுடன் கைகோத்து செயற்பட வேண்டும் என்பதே மக்களின் ஏகோபித்த வேண்டுகோள்.

அது நடக்கும் என்று நம்பிக் காத்திருப்பதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை. ☆

**வதனன்**

## சிறுவர் கழக இணையத்தின் கட்டுரைப் போட்டிகள்

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சிறுவர் கழகங்களின் இணையம் சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி நடத்திய கட்டுரைப்போட்டியின் முடிவுகள்:

**கீழ்ப்பிரிவு:**

முதலாம் இடம்: யாழினி கணேசலிங்கம்
யா/வட இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

இரண்டாம் இடம்: வி.சாரதாஜினி
யா/கன்னியர்மட மகா வித்தியாலயம்

மூன்றாம் இடம்: மு.வேணுகானன்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
வல்வெட்டித்துறை.

**மத்திய பிரிவு:**

முதலாம் இடம்: வெள்ளியங்கிரிநாதன் கோகுலன்
யா/இந்துக் கல்லூரி

இரண்டாம் இடம்: மீ.தர்மா
யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.

மூன்றாம் இடம்: மு.அறிவரசி
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

**மேற்பிரிவு:**

முதலாம் இடம்: பிரதா முகுந்தையா
யா/இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம்: ஸ்ரீ.டிலானி பவித்திரா
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

மூன்றாம் இடம்: கிருஷ்ணசாமி சுகர்ணா
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா எதிர்வரும் (26.01.2002) சனிக்கிழமை புதிய நேரம் காலை 9.30 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளைக் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இணையச் செயலாளர்,
146, கோயில் வீதி, நல்லூர்.

(C/20362)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்
யாழ்.கிளையில் காசாளராகக் கடமையாற்றியவரான

### திருமதி சிவமணி தேவராசன்

அவர்களின் அகாலமரணத்தையிட்டு ஆழ்ந்த சோகத்திலிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சு.சோதிவடிவேற்பிள்ளையும் குடும்பத்தினரும்
*காப்புறுதி அமைப்பாளர்,*
*பன்னாலை, தெல்லிப்பழை.*

(97345)

## கண்ணீர்ப் பூக்கள்

*எமது கமநல அபிவிருத்தித் திணைக்கள*
*சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்*
திரு.கே.ஆனந்தராசா அவர்களின் அன்பு மாமனார்

### இளையவன் சண்முகம் அவர்கள்

17-01-2002 அன்று இயற்கையெய்தியதையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரங்களில் நாமும் இணைந்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்
- கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம்.

கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும் - யாழ்ப்பாணம்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஏனைய உத்தியோகத்தர்களும்
- கமநல கேந்திரநிலையம், நல்லூர்.

(97345)

## கண்ணீர்க் காணிக்கை



மலர்வு 03 - 04 - 1930

உதிர்வு 18 - 01 - 2002

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்
திரு.சபாலிங்கம் விநாயகமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வாலாம்பிகை சபாலிங்கம்

அவர்களின் திடீர் மறைவு எமக்கெல்லாம் பெருமதிர்ச்சியையும் கவலையையும் தந்துள்ளது. தனது வாழ்க்கை ஓட்டத்தினை ஓடிமுடித்து அமைதியின் மடியில் துயில் பெற்றிருக்கும் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறையுலகில் கலந்திட நாமும் எம் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
*வேலணை ப.நோ.கூ.சங்கம்.*

*வேலணை.* (C/20384)

## அகதி முகாம் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள்

தென்மராட்சி, ஜன.21

வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு பருத்தித்துறை ஊற்று நிறுவனத்தினர் அப்பியாசக் கொப்பிகளை வழங்கவுள்ளனர்.

இன்று கரவெட்டி செங்குந்தா இடம்பெயர்ந்தோர் முகாமிலுள்ள மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-117)

## இளைஞர் கழகங்கள் அமைப்பு

நவாலி, ஜன.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக இளைஞர் கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 7 கழகங்கள் அப்பகுதி இளைஞர் யுவதிகளின் ஒத்துழைப்போடு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் சேவை மன்ற அலுவலர் விஜயரத்தினம் வினோதினி தெரிவித்தார்.

(ஜ-100)

## ஆதீனத்தில் இன்று இசை, நடன நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.21

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் புதிய கலாமண்டபத்தில் நடைபெற்றுவரும் "முத்தமிழ்" நிகழ்வுகளின் மூன்றாவது நாளான இன்று பிற்பகல் 3.30 மணிமுதல் மங்கள இசை, வீணை இசை, நிருத்தியாஞ்சலி என்பன இடம்பெறும்.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் இன்றைய நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார். பிரம்மஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். ஆர்.கேதீஸ்வரன் குழுவினர் நாதஸ்வர இசை வழங்குவர். திருமதி ஜனனி நடேசமூர்த்தியின் மாணவிகள் வீணை இசை இசைப்பர். திருமதி ஸ்ரீமோகனா பாலசுப்பிரமணியத்தின் மாணவிகள் (நல்லை ஆதீன நடனப்பள்ளி) வழங்கும் நிருத்தியாஞ்சலியும் இடம்பெறும்.

(க-7)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.21

நுணாவில்குளம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக தின விழா இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தின கிரியைகள் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ ச.சடாச்சரக்குருக்கள் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

(க-6-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.21

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாலஸ்தாபனக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பாலஸ்தாபனக் கிரியைகளை பிரமஸ்ரீ வாசுதேவக்குருக்களும், பிரம்மஸ்ரீ மு.சோமசுந்தரக்குருக்களும் இணைந்து நடத்துவர்.

(க.6.ரி)

★ ★ ★

சங்கானை புனித பிரான்சீஸ் சலேசியார் ஆலய திருநாள் திருப்பலி நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினசரி மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது.

நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நற்கருணை ஆசீர் வழிபாடும் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும் என்று ஆலய பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

(க-6-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.21

மயிலணி வடக்கு மனோன்மணி அம்பிகா சமேத அண்ணமார் மகேஸ்வரர் தேவஸ்தான கும்பாபிஷேக தின விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(க-6)

துறைமுக சேவையில் ஈடுபடும்

## லொறிகளின் உரிமையாளர், சாரதிகள் முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணை

### புதிய 'பாஸ்' வழங்குவதற்காக

யாழ்ப்பாணம்,ஜன.21

காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களில் சேவையில் ஈடுபட்டுவந்த தனியார் லொறிகளுக்கு புதிய 'பாஸ்' வழங்கப்படவிருக்கின்றது.

இதற்காக இந்த லொறிகளின உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோர் 512ஆவது படைத் தலைமையகம் அமைந்திருக்கும் ஞானம்ஸ ஹொட்டலுக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

மேற்படி துறைமுகங்களுக்குப் பொறுப்பான படை அதிகாரி கடந்த செப்ரெம்பர் மாதம் இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து இவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 'பாஸ்' ரத்துச் செய்யப்பட்டதாகவும் - லொறிகளின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் புதிய படை அதிகாரியினால் விசாரணை செய்யப்பட்ட பின்னரே புதிய 'பாஸ்' வழங்கப்படும் எனவும் - துறைமுகப் பகுதிக்கு பொறுப்பான இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் சுமார் 300இற்கும் மேற்பட்ட தனியார் லொறிகள் சேவையில் ஈடுபட்டு வந்தபோதிலும் தற்போது 75 லொறிகளே சேவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதனால் லொறி உரிமையாளர்கள் மிகவும் பாதிப்படைந்திருக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கம் யாழ்.அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

(க-4)

## 8ஆம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 12 - 07 - 1918

மறைவு 19 - 01 - 1994

### அமரர் வயிரமுத்து கந்தப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர் - கோப்பாய்)*

திதி: 21-01-2002

எமை விட்டுப் பிரிந்து ஆண்டு எட்டு கடந்திட்ட போதிலும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்:

*சோனெழு,கோப்பாய் மத்தி.* (C/20387) குடும்பத்தினர்.

## 45ஆவது நாள் நினைவு அஞ்சலி கண்ணீர்க் காணிக்கை



**திருமதி இரத்தினம் மகேஸ்வரி** — **செல்வி விக்கினேஸ்வரி (மாலா)**

03.10.1937 ← மலர்வு → 24.12.1979
22.12.2001 ← உதிர்வு → 15.12.2001

(இவர்கள் சுவிஸில் காலமானவர்கள்)

அன்போடும் பண்போடும் வாழ்ந்த அன்பு அம்மாவே!
உண்மையின் உறைவிடமாய்த் திகழ்ந்த மாலாவே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மறையாது!

*ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

இ.குணரட்ணம் (மகன்)
கு.கருணாவதி (மருமகள் - சுவிஸ்)
த.மங்களேஸ்வரி (மகள் - சுவிஸ்)
தர்மரத்தினம் (மருமகன் - சுவிஸ்)
இ.சண்முகரத்தினம் (மகன் - சுவிஸ்)
ச.சாந்தி (மருமகள் - சுவிஸ்)
இ.ஜெயரட்ணம் (மகன் - ஹொலண்ட்)
ஜெ.நந்தினி (மருமகள் - ஹொலண்ட்)
இ.ஜீவரெட்ணம் (மகன் - சுவிஸ்)

*பேரப்பிள்ளைகள்:*
கு.இராகுலன், த.துவாரகா
ஜெ.அபிநயா

கிறிஸ்தோப்பர்,
மனுநீதி (அப்பன்)
குடும்பத்தினர்,
டச்சு றோட், சாவகச்சேரி.

(97160)

# 'ஆஸ்த்துமா' நோய் குறித்த கருத்தரங்கில் ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்வைப்பு

"ஆஸ்த்துமா" (தொய்வு) நோய்க்கான சிகிச்சை வழிமுறைகள் தொடர்பான சித்த மருத்துவக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

சித்த ஆயுர்வேத மருந்து விற்பனையாளர்களான யாழ்.சிவா நறுமணப் பூங்காவின் ஆதரவில் லயன்ஸ கழகங்களின் மாவட்டம் 306B - பிராந்தியம் 10ஐச் சேர்ந்த மானிப்பாய் பற்று, நல்லூர், சுன்னாகம், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தன.

லயன்ஸ் கழகங்களின் பிராந்தியம் 10இன் பிராந்தியத் தலைவர் லயன் செ.ஞானராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் து.குருநாதசிவம் சிறப்பு விருந்தினராகவும், லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர்களான டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், டாக்டர் வி.தியாகராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கின் ஆரம்ப உரையை யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுத் தலைவர் லயன் சீமாட்டி மிதிலைச்செல்வி சிறிகாந்தன் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் சித்த மருத்துவத்தின் சிறப்பையும், ஆஸ்த்துமா (தொய்வு) நோய்க்குரிய மூலகாரணிகள் பற்றியும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து சித்த மருத்துவப் பிரிவு உள்ளக வைத்தியர் செல்வி சசிவதனி சச்சிதானந்தன் தொய்வு நோயாளிகள் . பாவிக்கவேண்டிய மற்றும் தவிர்க்கவேண்டிய உணவு வகைகள் பற்றி விளக்கமாகக் கூறினார்.

தொடர்ந்து சித்த மருத்துவப் பிரிவின் மற்றோர் உள்ளக வைத்தியரான செல்வி மேகலை சிவசுப்பிரமணியம் தனதுரையில் - தொய்வு நோயினை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது பற்றிய விளக்கங்களையும், தொய்வு நோயாளிகள் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் பற்றியும் விரிவாகக் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியப் பிரிவின் விரிவுரையாளர் லயன் பொன்.இராமநாதன் தமதுரையில்- தொய்வு நோயினால் பீடிக்கப்பட்டவர்களிலும்பார்க்க அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கே அதிக துன்பம் ஏற்படும் என்றும் -

சித்த மருத்துவத்துடன் யோகாசனமும் இணைந்தால் தொய்வு நோயை முற்றாகக் குணமடையச் செய்யலாம் என்றும் கூறினார்.

தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் சுதேச வைத்தியப் பணிப்பாளர் லயன் பூரண பசுபதிப்பிள்ளை உரோமகேஸ்வரன் உரையாற்றினார்.

அவர் தமதுரையில் -

குழந்தைப் பருவம் முதல் வயோதிபப் பருவம் வரையில் ஒருவருடைய வாழ்க்கையில் சித்த மருத்துவம் எவ்வாறு இணைந்துள்ளது என விரிவாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து தொய்வுநோய் சம்பந்தமான ஒரு விளக்கக் கையேடு ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனை லயன் வைத்திய கலாநிதி உரோமகேஸ்வரன் ஆக்கியிருந்தார். இதன் முதற்பிரதியை சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் பெற்றுக் கொண்டார்.

கருத்தரங்கின்போது சிவா நறுமணப் பூங்கா ஸ்தாபனத்தாரின் விற்பனையில் உள்ள பல வகையான சித்த ஆயுர்வேத மருந்துகளும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

கருத்தரங்கின் இறுதியில் யாழ். நகரில் சித்த ஆயுர்வேதச் செடிகள் அடங்கிய பூங்கா ஒன்றை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. (க-7)

### யாழ்நகரை அண்டிய பகுதிகளில்

# திருட்டு, கொள்ளைச் சம்பவங்கள் கடந்த வருடத்தில் அதிகம்!

யாழ்ப்பாணம்,ஜன.21

கடந்த வருடம் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் மட்டும் நூறுக்கு மேற்பட்ட திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக யாழ். பொலீஸ் நிலையப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் வீடுகள் மற்றும் கடைகள், பொது இடங்கள், ஆலயங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட திருட்டுக்களும், பட்டப்பகலில் வீதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களும் அடங்குகின்றன.

இவற்றை விட சைக்கிள் மற்றும் மோட்டர் சைக்கிள் திருட்டுப்போன சம்பவங்கள் தொடர்பாக 40 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றில் பல முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிந்து விட்டன என்றும் -

மேலும் சில முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் -

யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

65இற்கும் மேற்பட்ட விவாகரத்து சம்பந்தமான முறைப்பாடுகளும் யாழ். பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டைவிடவும் மிகவும் அதிகமானது எனவும் -

யாழ்.குடாநாட்டில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் முன்வந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வராவிட்டால் இந்த எண்ணிக்கை இவ்வருடம் மேலும் அதிகரிக்கும் எனவும் -

யாழ். பொலஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.என்.குடாஹெட்டி உதயனுக்குத் தெரிவித்தார். (க-4-ரி)

### 6 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற

# மறவன்புலோ, கைதடி சுற்றிவளைப்பில் கைதாகி காணாமற்போன 23 பேரின் விசாரணைகள்

## உறவினர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

கடந்த 1996ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி சாவகச்சேரி, மறவன்புலோ, கைதடி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைதுசெய்யப்பட்டு காணாமற்போன 23பேர் தொடர்பான விசாரணைகள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெறவிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஐ.பி.நிஷாந்த பெரேரா தலைமையிலான நான்குபேர் கொண்ட விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை நடத்தவிருக்கின்றனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகளுக்காக உறவினர்கள் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனர். வரும்போது காணமற்போனவரின் பொலீஸ முறைப்பாட்டுச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், புகைப்படம், அந்தந்தப் பகுதி கிராமஅலுவலரின் பெயர், இலக்கம் என்பவற்றை எடுத்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

காணாமற்போனவரின் பெயர், கோவை இலக்கம், விலாசம் என்பன முறையே வருமாறு:

★ ராஜரட்ணம் அஜந்த் (கோவை இலபி.5) இல. 24, அரியாலை கிழக்கு.

★ பரமநாதன் நடேஸ்வரன் (கோவை இல. பி.6) கைதடி மேற்கு, கோயிலாக்கண்டி.

★ கதிர்வேலுப்பிள்ளை கேதீஸ்வரன் (கோவை இல. பி.7) கைதடி, நாவற்குழி.

★ ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக்ட் (கோவை இல. பி.11) கேரதீவு வீதி, கைதடி.

★ அந்தோனி திலகரத்னம் (கோவை இல. பி.12) கைதடி, நாவற்குழி.

★ அருணமுகி கேதீஸ்வரன் (கோவை இல. பி.13) கைதடி கிழக்கு, நாவற்குழி.

★ இமானுவல் மரியஜெயசீலன (கோவை இல. பி.29) மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ கோலசிங்கம் அம்பிகைபாகன் (கோவை இல. பி.42) கைதடி, நாவற்குழி.

★ பொன்னையா ஜெயராஜா (கோவை இல. பி.43) நாவற்குழி தெற்கு, கைதடி.

★ சின்னத்தம்பி திருவருட்செல்வம் (கோவை இல. பி.69) கோயிலாக்கண்டி, கைதடி.

★ பூபாலசிங்கம் ஜெயலலிதா (கோவை இல. பி.75) மறவன்புலோ.

★ சீனியர் தர்மலிங்கம் (கோவை இல. பி.80) கந்தரோடை.

★ திருநாவுக்கரசு சுதாகரன் (கோவை இல. பி.86) இல.1, மத்திய மேற்கு வீதி, குருநகர்.

★ கந்தையா புஷ்பராசா (கோவை இல. பி.97) தனங்களப்பு.

★ கணேஸ் ரமேஷ் (கோவை இல. பி.121) நாவற்குழி தெற்கு.

★ பொன்னம்பலம் கண்ணதாசன (கோவை இல. பி.125) தச்சன்தோப்பு.

★ சிதம்பரபிள்ளை பேரின்பநாதன (கோவை இல. பி.131) நாவற்குழி தெற்கு.

★ பொன்னன் ரவீந்திரன் (கோவை இல. ஏ.11) கைதடிச்சந்தி.

★ சின்னத்தம்பி சிவகுமார் (கோவை இல. ஏ.13) நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு.

★ ஜோன்பிள்ளை அன்ரன் அமலநாதன் (கோவை இல. ஏ.21(2)) நாவற்குழி, கைதடி.

★ பண்டாரரத்தினம் செல்வக்குமார் (கோவை இல. பி.126) இராசாவின் கோப்பு, கைகடி.

★ முருகன் ஜெயரட்ணம், முருகன் சிவராசா (கோவை இல. பி.3) மறவன்புலோ, சாவகச்சேரி.

★ பி.கிருபாகரன் (கோவை இல. பி.4/66) நாவற்குழி மேற்கு, கைதடி.

இதேவேளை -

இவர்களுடன் கைதுசெய்யப்பட்ட மேலும் 24பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுவிட்டனர் எனவும் -

அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் யாருக்காவது மேற்குறிப்பிட்ட காணாமற்போனோர் தொடர்பான தகவல்கள் தெரிந்திருப்பின் அவர்களும் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வந்து சாட்சி சொல்ல முடியும் எனவும் -

அவ்வாறு சாட்சி சொல்பவர்களின் விவரங்கள் இரகசியமான முறையில் பேணப்படும் எனவும் - குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.நிஷாந்த பெரேரா தெரிவித்திருக்கின்றார். (க-4-ரி)

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## சுவர் வீழ்ந்து தொழிலாளி படுகாயம்

தென்மராட்சி,ஜன.21

ஆலய புனருத்தாரண வேலைகளுக்காக 10 அடி சுவரை அகற்ற முயன்றவேளையில் சுவர் சரிந்து வீழ்ந்து தொழிலாளி அதனுள் அகப்பட்டு கால் பெருவிரலை இழந்ததுடன் தலையில் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை சிவன் கோயிலில் இடம்பெற்றது.

எழுதுமட்டுவாழ் சிவன்கோயிலடியைச் சேர்ந்த சிவராசா சிவகீதன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ரூபன் (வயது 18) என்பவர் சிறுகாயத்திற்கு உள்ளானார். (க-117)

# வாசகர் திருமுகம்

## தபால் பகுதியினருக்கு ஓர் ஆலோசனை

தொலைத் தொடர்பு வசதிகள் குறைந்த யாழ்.மாவட்டத்தில் தபால் சேவை மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. உள்ளூர் தபால் சேவை ஓரளவு திருப்திகரமாக இருந்தபோதும் இந்தச் சேவையில் உள்ள ஒரு முக்கிய குறைபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதாவது கடித உறையின் மேல் ஒட்டப்பட்டிருக்கும் தபால் தலையில் (Stamp) பொறிக்கப்படும் இறப்பர் முத்திரை கண்களுக்குப் புலப்படாத வகையில் மிகவும் மங்கலாகவே உள்ளது. ஊர், பேர் இன்றி கடிதங்கள் அனுப்பி வம்புவேலை பார்ப்போருக்கு இது மிக வசதியாக இருக்குமெனின் ஐயமில்லை.

தபால் தலையினைப் பாவனையிழக்கச் செய்வதற்கு மட்டுமன்றிக் கடிதம் எந்த இடத்திலிருந்து வந்திருக்கிறதென்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ள இந்த இறப்பர் முத்திரை அடையாளம் மிகவும் வேண்டப்பட்ட ஒன்றாக உள்ளது.

எனவே - இனிமேலாவது ஏனோதானோவென்று இல்லாமல் எழுத்துக்கள் தெளிவாக விளங்கும்படியாக கடிதங்களில் இறப்பர் முத்திரையைப் பதிக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திருநெல்வேலி* **பவானி**

## நெடுந்தீவு ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இல்லையா?

18-01-2002 அன்றைய உதயன் நாளிதழில் நெப்போலியன் தலைமறைவாகி உள்ளார் என்றும், அதற்கு முதல்நாள் இதழில் அவர் இன்றியே விசாரணை நடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றும் செய்தி வெளியாகி இருந்ததைக் கண்டு மிக அதிர்ச்சியுற்றேன்.

ஏனென்றால் குறிப்பிட்ட அந்த நெப்போலியன் எம்மூரில் மிக சாதாரணமாக நடமாடித்திரிகிறார். இது எம் ஊரவர்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். இவ்வாறாக உள்ளபோது எப்படி பொலீஸார் இவரைக் கைது செய்ய முடியாது என நீதிமன்றத்தில் தெரிவிப்பார்கள்? நீதிவான் இதை எவ்வாறு ஏற்றுக்கொண்டார்?

நெடுந்தீவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளனவா? யாழ்ப்பாணத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான கிலோமீற்றர்களுக்கு அப்பாலா நெடுந்தீவு உள்ளது? சட்டத்தை நிலைநாட்டவேண்டும், நீதியை நிலைநாட்ட வேண்டும், அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என சம்பந்தப்பட்டோருக்கு உண்மையான அக்கறை இருக்குமாயின் இச்சந்தேகநபரைக் கைதுசெய்து உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்தமுடியும் என நான் நினைக்கின்றேன்.

இவர்தான் சந்தேகநபர் என இனம் காட்டுவது மட்டும் ஒரு பொறுப்புள்ள பொலீஸ் அதிகாரியின் கடமையாகாது. அந்த நபரை நீதியின் முன் நிறுத்தவேண்டியது பொலீஸாரின் கட்டாயக் கடமையாகும்.

நெடுந்தீவில் சாதாரணமாக உலாவரும் ஒருவர் தலைமறைவாகி விட்டார் எனப் பொலீஸார் குறிப்பிடுகிறார்கள் என்றால் நெடுந்தீவில் வாழும் எல்லா பிரஜைகளும் தலைமறைவாகியவர்கள் என்றா அர்த்தம்? அங்குள்ளவர்கள் நீதிக்கும் சட்டத்துக்கும் அப்பாற்பட்டவர்களா? இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இத்தீவு இல்லையா?

சம்பந்தப்பட்டோருக்கு இவை சமர்ப்பணம்.

உண்மையாக சட்டத்துறையைப் பாதுகாக்க, நிலைநாட்ட பொலீஸார் பாடுபடுபவர்களாக இருப்பார்களாயின் உடனடியாக எம்மூரில் சாதாரணமாக நடமாடித்திரியும் இவரைக் கைதுசெய்யமுடியும்.

இவர் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை, நாரந்தனை படுகொலைகளுடன் மட்டுமன்றி நெடுந்தீவில் நடைபெற்ற சில மர்மக் கொலைகளின் சூத்திரதாரி என்பதை இவ்வூர் மக்கள் அறிவார்கள்.

இப்படியான குற்றவாளியைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள். இல்லையேல் உங்கள் சட்டமும், நீதியும், நியாயமும் வெறும் கேலிக்கூத்தாகிவிடும்.

*நெடுந்தீவு.* **சி.சத்தியவான்.**

## நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல விமான டிக்கெட் கிடைக்குமா?

**Managment system Ltd** என்ற நிறுவனம் அலுவலக உத்தியோக பயிற்சியாளர்களுக்கான நேர்முகத் தேர்வு ஒன்றை எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பில் நடத்தவுள்ளது. இதன் மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கை வங்கிக் கிளைகளில் பயிற்சியாளர்களாக உள்வாங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 40 பரீட்சார்த்திகளில் இருந்து தெரிவு செய்யப்படோருக்கே இவ்வாறு நேர்முகப் பரீட்சை தொடர்பான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தந்தி அறிவிப்பு (Telegram) கடந்த 15ஆம் திகதி சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டியவர்கள் தமது பயண ஏற்பாடுகள் தொடர்பாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் அங்கிருந்து வரும் ஒரே பதில் 28ஆம் திகதி வரைக்கும் விமான பயணிகளுக்கான "ரிக்கெட்டுக்கள்" பூர்த்தியாகிவிட்டன என்பதாகும்.

வடபகுதி மாணவர்கள் எத்தனையோ விதமான இடர்ப்பாடுகள் மத்தியில் தாம் தென்பகுதி மாணவர்களின் கல்வித் தரத்துக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துவரும் வேளையில் சிவில் நிர்வாக அலுவலகத்தின் இந்த அறிவிப்பு பெரும் கவலை தருவதாய் உள்ளது.

அரசியல் கட்சிகளின் தலையீடுகள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளின் செல்வாக்குப் போன்ற எந்தவித அழுத்தங்களுமின்றி தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்ற அரியதொரு சந்தர்ப்பமாகவும் இந்தத் தெரிவு அமையவுள்ளது. எனவே, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள மாணவர்கள் தற்போது செய்வதறியாது உள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளின் பிரச்சினைக்கு முடிவு காணப்படவேண்டுமாயின் -

☆ சம்பந்தப்பட்ட நிறுவனம் இந்த நேர்முகத் தேர்வை யாழ்ப்பாணத்தில் நடத்த முன்வர வேண்டும்.

☆ நேர்முகத் தேர்வை பிற்போடவேண்டும்.

☆ அதிகாரிகள் எவராவது நேர்முகத் தேர்விற்கு பரீட்சார்த்திகள் செல்லுவதற்கான பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆகிய மூன்று வழிகள் உள்ளன.

குறிப்பிடப்பட்டுள்ள முதல் இரு வழிகளும் அவ்வளவு சாத்தியமானவை என்று கூறமுடியாது. அன்றியும் இந்த நேர்முகத் தேர்வுக்கு இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் பரீட்சார்த்திகள் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே மூன்றாவது வழியாக இந்து கலாசார அமைச்சராக இருக்கும் தி.மகேஸ்வரன் இவர்களுக்கான பயண ஒழுங்குகளை மேற்கொண்டு வழங்கினால் பரீட்சார்த்திகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என நான் எண்ணுகின்றேன். எனவே அமைச்சர் அல்லது வேறு உயர் அதிகாரிகளாவது இது விடயத்தில் முனைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*யாழ்ப்பாணம்.* **பரீட்சார்த்தி ஒருவர்.**

# மூதூரில் மீண்டும் ஐ.சி.ஆர்.சி. அலுவலகம்

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் மூதூர் கிளை அலுவலகம் இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படுகின்றது. இந்த அலுவலகம் மூலம் மூதூர், சேருவிலை, ஈச்சிலம்பத்தை ஆகிய பகுதிகளில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளை முழு அளவில் மேற்கொள்ளமுடியும் எனவும் -

பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு இடம்பெயர்ந்த மருத்துவ சேவையை வழங்குவதற்கு வசதியாக இருக்கும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (க-4)


## நன்றிகள் பலவுடன் நல்வாழ்த்துக் கூறுகின்றோம்



### திரு.செ.கு.சண்முகநாதன்


*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம்)*

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த காலகட்டத்தில், கூ. அ. உ. ஆணையாளராகப் பதவியேற்று, பிரதேச செயலர்களின் கண்காணிப்பிலிருந்த கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுப்பேற்று மீண்டும் கூட்டுறவு சமூகம் புதுப்பொலிவுடன் திகழ வழிவகுத்தும், பல புதிய கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கியும், வளர்த்தும், சிதைவுண்டு, சிதறுண்டு கிடந்த கூட்டுறவு இயக்கங்களை இணைத்தும் கூட்டுறவுக்கென கூட்டுறவு வங்கியை அமைத்தும், 'கூட்டுறவு' என்ற ஐந்தெழுத்து நலிந்து சிதைவுறாமல் என்றும் தலைநிமிர்ந்திருக்க தன்னலம் கருதாது கூட்டுறவுத் திணைக்களத்திற்கென காணி, கட்டடத்தைக் கொள்வனவு செய்தும், கூட்டுறவுப் பணியாளர்களின் நலனில் அதிக ஆர்வம் கொண்டு இழப்பீட்டு நிதியத்திற்கு புத்துயிர் கொடுத்து, அதன் பலனைப் பகிர்ந்தளித்தும், ஐந்து வருட அருஞ் சேவைக்காலத்தில் கூட்டுறவு என்ற அமைப்பின் மகிமையையும், தனித்துவத்தையும் மக்கள் மனதில் ஆழமாகப் பதியவைத்தும், கூட்டுறவின் மணி மகுடமாக எட்டுத்திக்கும் ஏற்றிப் போற்ற அருஞ் சேவை புரிந்த எமது சங்க எல்லைப்பரப்பின் ஏந்தல் திரு. செ. கு. சண்முகநாதன் அவர்கள் திருகோணமலை தலைமை அலுவலகத்திற்கு சிரேஷ்ட உதவி ஆணையாளராகச்செல்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு அவரின் சேவை "குன்றின் மேல் தீபம்" போல மேன்மேலும் சிறக்கவும் நல்வாழ்த்துக் கூறுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
*சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,*
*சுன்னாகம்.* (C/20364)


## நெஞ்சை விட்டகலா
# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
20 - 10 - 1927



உதிர்வு
20 - 12 - 2001

### அமரர் செல்லத்துரை ஞானப்பிரகாசம்

*(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)*

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் சிகரமே!
பாரினில் எமை வாழ வைத்த தெய்வமே!
ஏணியாய் இருந்து ஏற்றங்கள் நாம் காண
வழி வகுத்தீரே!
மறைந்தும் மறையாத மாணிக்கமாய்
எம் மனதில் நிலைத்துவிட்டீர் அப்பா!

அன்னார் 20-12-2001 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமாகிய செய்தி கேட்டு துயருறும் நாம் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மணி (மனைவி),
*பிள்ளைகளான*
சாந்தி, யூலியன், கிறேசியன்,
பிலேவியன், வெலிசியா, ஐடா,
*மருமக்களான*
சேவியர், சந்திரன், றெஜி,
பொபினா, ஜெனித்தா, அகிலா.
செல்லத்துரை *(சகோதரன்)*,
இம்மானுவேல் *(பபா - மைத்துனன்)*
பேரப்பிள்ளைகள்.

*தகவல்:*
திரு.திருமதி அ.றெஜி, ஐடா,
*இல.04,*
*மவுண் காமல் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (97355)

## தொழில்நுட்ப மாணவருக்கான விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகள் ஆரம்பமாகும் திகதி தலைமை அலுவலக பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி பகல் நேர வகுப்பு மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய அறிவுறுத்தலின் பிரகாரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதியே விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் இயக்குநர் ரீராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

இவ்வாறே மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகள் யாவும் எதிர்வரும் 9ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ளன.

(க-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜன.21

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜன.21

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு:

குமரன் வி.க. எதிர் ஒலிம்பிக் வி.க.

கொக்குவில் மத்திய ச.ச.நிலைய வி.க. எதிர் நல்லூர் விநாயகர் வி.க.

(க-86)

## அகதி முகாமில் இருந்து வெளியேற முடியாத 7 குடும்பங்கள்

தென்மராட்சி,ஜன.21

கரவெட்டி திருஇருதயக் கல்லூரி வளவில் அமைக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாமை உடனடியாக அப்புறப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதை யடுத்து அங்கு தங்கியிருந்த குடும்பத்தவர்கள் செய்வதறியாதுள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்த முகாமில் தங்கியுள்ளனர்.

தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பும்வரை தம்மை வெளியேற்ற வேண்டாமென இந்தக் குடும்பங்கள், தென்மராட்சி, கரவெட்டி பிரதேச செயலர்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)


## வைத்தியம்

*செங்கண்மாரி, அல்சர்,*
*ஆஸ்துமா, வாதநோய்கள்,*
*வலிப்பு நோய், பீனிசம்,*
*தலையிடி,*
*தலை கால் அவியல்,*
*சருமநோய்கள்,*
*மாதவிடாய்க்குத்து,*
*இரத்தப்போக்கு,*
*வெள்ளைக்கசிவு, கருவழிதல்,*
*மகப்பேறின்மை, குழந்தை*
*வைத்தியம், வீரியக்குறைவு,*
*மூலவியாதிகள்,*
*மூத்திரரோகங்களில்*
*பிரபல்யமானவர்.*
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*
(97353)

வேலணை வைத்தியசாலை
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பர் மாணிக்கவாசகர் J.P.

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ். மாநகரசபை)

புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பர் மாணிக்கவாசகர் நேற்றுமுன்தினம் (19.01.2002) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், பார்வதவர்த்தனியின் பாசமிகு தந்தையாரும், பாலகிருஷ்ணன் (யாழ். வ.தொ.கூ.சங்கக் காரியாலயம்) அவர்களின் அருமை மாமனாரும், சருமிளா (மாணவி, 2000 பிரிவு - யாழ்.இந்து மகளிர் கல்லூரி), தாட்சாயணி (மாணவி, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சிறிஸ்கந்தராஜா (யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் கிந்து சிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.பாலகிருஷ்ணன்** *(மருமகன்)*.
*உடையார் வளவு,*
*புத்தூர் மேற்கு.* (97349)

## திருமதி இரத்தினம் இராசம்மா

சாவகச்சேரி, சங்கத்தானை, பசுபதியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, மதவடி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இராசம்மா நேற்று 20.01.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி, சண்முகநாதன் (சின்ராசு), யோகேஸ்வரி (நோனா), லட்சுமிகாந்தன் (கிளி - உரிமையாளர், ஜுவல்லறி நிதுஸ், மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ.லட்சுமிகாந்தன் (கிளி) (மகன்)
*22/2. மதவடி லேன்,*
*நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (97358)

## பொன்னுத்துரை மனமோகன் (சாந்தன்)

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வரியப்புலம், சுன்னாகத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மனமோகன் நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியின் அன்பு மகனும், கலாநிதியின் அன்புக் கணவரும் அபிவர்ஷனி, பிரியங்கன், குகாங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மல்லிகாதேவி, மனோகரன் (தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கம்), Dr.மகாதேவன் (கால்நடை வைத்தியர், தெல்லிப்பழை), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயேந்திரன் (கனடா), அருள்ராஜா (கொழும்பு), இராசரத்தினம், ரதி, ஜெயமாலா (வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), சுகுணாதேவி (லண்டன்), ஆகியோரின் மைத்துனரும் ருபினி (கனடா), சுஜாதா (கொழும்பு) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வரியப்புலம், சுன்னாகத்தில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெற்றோர், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.
*வரியப்புலம்,*
*சுன்னாகம்.* (97354)

## சின்னத்தம்பி வெற்றிவேலு

(ஓய்வு பெற்ற முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சங்கானை)

பண்ணாகம் சின்னத்தம்பி வெற்றிவேலு நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், அன்பழகன் (மாருதி அச்சகம், பண்ணாகம்), கலையழகன் (ராஜா பதிப்பகம் பண்ணாகம்) அருளழகன் (ப.நோ.கூ.சங்கம், சங்கானை), வேலழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிறிசிவசண்முகானந்ததேவி, தவசோதி, நற்குணதேவி, அருணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஐங்கரன், சங்கவி, வைரவி, பகிரதன், பாரதி ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னையா ஞானச்சந்திரமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-01-2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (97357)

## திருமதி சபாலிங்கம் வாலாம்பிகை

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் (இலுப்பையடிச் சந்தி) கொண்ட திருமதி சபாலிங்கம் வாலாம்பிகை 18-01-2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சபாலிங்கத்தின் அன்பு மனைவியும் சின்னையாவின் அன்புச் சகோதரியும் விஜயரத்தினம் (செல்வ மகன்), விநாயகமூர்த்தி (சின்னக்கிளி, பொதுமுகாமையாளர் - வேலணை ப.நோ.கூ.சங்கம்), கேதீஸ்வரன், யதுகுலசிங்கம், இராஜேஸ்வரி, யதுகுலமணி ஆகியோரின் அன்புத் தயாரும் சிவஞானதேவி, இரத்தினாநந்ததேவி, சந்திரவதனா, நளாயினி, ரவீந்திரன், சௌந்தரராஜன், இராசரெத்தினம், சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் கவீந்திரன், வினோஜா, ஜனாகரன், யசிந்தன், அகீபன், பிரதீபன், பிரியகீர்த்தனா, கஜலக்ஷி, தனராகவி, சயந்தி, வித்தியா, விவேதன், அஜந்தன், சர்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 265/1, நாவலர் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
*265/1, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (97356)

# பாதை எப்போது திறக்கப்படும்? புலிகளின் கைகளில் திறவுகோல்!

**இனப்பிரச்சினைக்கான தீர்வுகாண்பதன் ஓர் அங்கமாக - சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக தரைவழிப் பாதை திறக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தினமும் இனிய செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால் நாம் நினைக்கும் அளவுக்கு - விரும்பும் அளவுக்கு அது இலகுவான காரியமல்ல. இது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. 'லக்பிம' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சுமார் 15 வருடங்களாக வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத விதத்தில் மூடப்பட்டிருந்த வவுனியா - யாழ். நெடுஞ்சாலை (ஏ-9 என அழைக்கப்படும் யாழ்.- கொழும்பு நெடுஞ்சாலை) விரைவில் அரசினால் திறந்துவைக்கப்படவுள்ளது என சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

"LTTE Opens Route to Peace" என்ற தலைப்பில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று முக்கிய செய்தியாக இந்த விடயத்தைப் பிரசுரித்தது. அந்தச் செய்தியைத் தயாரித்தவர் கொழும்பு கண்டி வீதியால் எத்தனையோ தரம் பயணம் செய்தவரும் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான செய்தியாளராவார்.

அரசு இந்த நெடுஞ்சாலையைத் திறக்கவுள்ளது எனச் சில பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஆனால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியோ இந்த நெடுஞ்சாலையை புலிகள் திறந்துவிடவுள்ளனர் எனத் தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர் எனவும் இந்த நெடுஞ்சாலையை அவர்கள் திறந்து விடுவதற்கான ஆயத்தங்க

**தமிழில் : கஜனி**

ளைச் செய்து வருகின்றனர் எனவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அவ்வாறெனில் உண்மையில் இந்த நெடுஞ்சாலையை மூடிவைத்திருப்பவர்கள் யார்? பாதுகாப்புப் படையினரா அல்லது விடுதலைப் புலிகளா? இல்லையேல் இரு தரப்பினருமா? இந்த இரு தரப்பாரில் ஒரு தரப்பினர் விரும்பும்போது இந்த நெடுஞ்சாலையைத் திறந்துவிட வாய்ப்புக்கள் உள்ளனவா?

### ஏ-9 வீதி பிரபலம்

ஏ-9 என்றவுடன் அது கொழும்பு - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை என்பதை இன்று பலரும் அறிவர். ஆனால் கொழும்பு - கண்டி நெடுஞ்சாலை அல்லது கொழும்பு - காலி நெடுஞ்சாலை என்ன இலக்கங்களால் அழைக்கப்படுகிறது என்பதை இவர்களில் பலர் அறியமாட்டார்கள். ஏ-3 என்ற இலக்கத்தை உடைய நெடுஞ்சாலை எது என்பதற்கு ஒரு சிலரே பதில் தருவர். அவ்வளவுக்கு ஏ-9 என்ற நெடுஞ்சாலை பிரபலம் அடைந்துள்ளது.

கொழும்பு - யாழ். நெடுஞ்சாலை குறித்து பலர் அறிந்துகொள்ளக் காரணமும் இருந்தது. சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் சுமார் 16 மாதங்களாக இந்தப் பாதை தொடர்பான செய்திகள் வெளிவந்தன. 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கை இடம்பெற்றபோதே இந்த நெடுஞ்சாலை குறித்த தகவல்கள் வந்தன.

1995இற்கு முன்னர் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாத்திரமல்ல வவுனியாவிலிருந்து வடக்கின் எப்பகுதிக்காவது பாதுகாப்புப் படையினரோ அல்லது தென் பகுதியிலிருந்து எவரோ செல்ல வாய்ப்பு இருக்கவில்லை. இராணுவ முகாம்கள் இருந்த பகுதிகள் தவிர வடக்கின் ஏனைய பகுதிகள் யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

அவ்வாண்டு (1995) ஒக்ரோபர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாத முற்பகுதி வரை மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரச' இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்.குடாநாடு இராணுவத்திடம் வீழ்ந்தது. 1996இல் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரையான பிரதேசத்தை (நெடுஞ்சாலையைக்) கைப்பற்றினர்.

இதன் படி ஏ-9 எனப்படும் யாழ். - கொழும்பு நெடுஞ்சாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரையும் மற்றும் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வடக்கே உள்ள தாண்டிக்குளம் வரையுமான பகுதி படையினர் வசமானது. தாண்டிக்குளத்திலிருந்து கிளிநொச்சி வரையான 70 கிலோமீற்றர் தூரமான நெடுஞ்சாலை மட்டுமே புலிகள் வசமிருந்தது.

### கிளிநொச்சியைப் புலிகள் கைப்பற்றினர்

விடுதலைப் புலிகள் வசமிருந்த 70 கிலோ மீற்றர் நெடுஞ்சாலையைக் கைப்பற்றவே 1997 மே மாதம் 13 ஆம் திகதி 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தனர். அந்த நடவடிக்கை 1998 செப்ரெம்பர் 29ஆம் திகதி வரை இடம்பெற்றது. அன்று (29.09.1998) இரு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன. அதாவது படையினர் மாங்குளம் நகரைக் கைப்பற்றினர். மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் கிளிநொச்சியை மீண்டும் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றினர். இந்த இரு சம்பவங்களைத் தொடர்ந்து 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என அறிவிக்கப்பட்டது.

'ஜயசிகுறு' நடவடிக்கையானது ஸ்ரீலங்காவின் இராணுவ வரலாற்றில் நீண்ட காலம் மேற்கொள்ளப்பட்ட தனியான இராணுவ நடவடிக்கை ஆகும். 'ஜயசிகுறு' நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான படையினர் பலியாகினர். ஏ-9 நெடுஞ்சாலையைத் திறக்கவேண்டியிருந்த (கைப்பற்றவேண்டிய) காரணத்தால் பெருமளவில் ஆயுத தளபாடங்களையும் உயிர்களையும் அன்று அரசு இழக்க நேரிட்டது.

### பாதை திறப்பது என்பது இலகுவான காரியமல்ல

ஆனால் இந்த நெடுஞ்சாலையைத் திறப்பது என அரசு தீர்மானித்துள்ளதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இது அவ்வளவு இலகுவான விடயம் எனில் - அரசினால் தன்னிச்சையாக முடிவெடுக்கக்கூடிய விடயம் எனில் - இராணுவ வரலாற்றிலேயே மிக நீண்டகாலம் மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையின் அர்த்தம்தான் என்ன என்ற கேள்வி எழுகிறது.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும் இந்த நெடுஞ்சாலையின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை தங்குதடையின்றிப் போகமுடியாத நிலைமை. வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வரும் பயணிகள் படையினரால் சோதனையிடப்படுகின்றனர். அந்தப் பயணிகள் இடையே சந்தேகத்துக்கிடமானோர் இருப்பின் அவர்களைப் படையினர் கைது செய்கின்றனர்.

எனவே விடுதலைப் புலிகள் தாங்கள் நினைத்த மாத்திரத்தில் இந்த நெடுஞ்சாலையைத் திறக்க வாய்ப்புக்கள் இல்லை.

நெடுஞ்சாலையின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் மறுபகுதி படையினரின் கட்டுப்பாட்டிலும் இருக்கும் வரை இந்த நிலைமையே தொடரும்.

இந்த நிலைமை மாறவேண்டுமாயின் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான நெடுஞ்சாலையை அண்டிய பிரதேசங்கள் அனைத்தையும் படையினர் கைப்பற்ற வேண்டும். அல்லது நெடுஞ்சாலையைத் திறப்பது தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உடன்பாடு ஒன்று காணப்படவேண்டும். இருப்பினும் இந்த இரு விடயங்களில் ஒன்றாவதுகூட இதுவரை இடம்பெறவில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் எவரும் ஒரு தரப்பாக - தன்னிச்சையாக நெடுஞ்சாலையைத் திறப்பது கடினம். பாதை திறப்பது தொடர்பாக அதிகாரிகள் பத்திரிகைகளுக்குத் தகவல்களைத் தருவது இந்த நிலையிலேதான்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஆங்கிலப் பத்திரிகையில் விடுதலைப் புலிகள் வன்னியின தெற்கு முனையிலுள்ள பிரமணாலங்குளம் வீதித்தடையையும் வடக்கில் பளை, முகமாலைப் பகுதியில் அமைந்துள்ள வீதித் தடையையும் அகற்றி அவற்றிற்கு இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நெடுஞ்சாலை வழியாக வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ளவதற்காக பாதையைத் திறக்க இணங்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் விடுதலைப் புலிகள் வன்னி ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ள இடமளிக்கத் தயாராயுள்ள போதிலும் ஏ-9 நெடுஞ்சாலை வழியாக அனுமதிக்கத் தயார் இல்லை என்பதுபோல் தெரிகிறது. ஏனெனில் பிரமணாலங்குளம் யாழ் - கொழும்பு வீதியில் அமைந்திருக்க

## எல்லோரும் நினைப்பதுபோன்று இலகுவான காரியமல்ல அது

வில்லை. அது மன்னார் - வவுனியா வீதியிலேயே அமைந்துள்ளது.

### பஸ் சேவை குறித்து வெளியான செய்தி

இதற்கிடையில் கடந்தவாரம் 'வீரகேசரி' பத்திரிகையில் மேலும் ஒரு புதுமையான செய்தி வெளியாகியிருந்தது. அதாவது வவுனியாவிலிருந்து தமது கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி வரை பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் அரசிடம் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனராம். பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் மேற்கொண்ட மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் திட்டம் பற்றி அறிவித்துள்ளார் என அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

அந்தச் செய்தியின்படி வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் தாங்கள் புதைத்துள்ள கண்ணிவெடிகளை அகற்றவும் விடுதலைப் புலிகள் அரசிடம் விருப்பம் தெரிவித்துள்ளனர். இது தற்போதே அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நல்லுறவு உருவாகியுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இல்லாவிடின் பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் அரசிடம் எவ்வாறு திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியும்? இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளோ அல்லது அரசோ உத்தியோகபூர்வமாக எதுவித அறிவிப்பையும் வெளியிடவில்லை.

பிரமணாலங்குளம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றை இணைக்கும் வீதியை உரியமுறையில் நன்கு செப்பனிடாமல் இரண்டரைக் கோடிக்கு மேற்பட்ட நிதியைச் செலவுசெய்து தற்காலிகமாகத் திருத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் சேவை மேற்கொள்ளப்படவுள்ள வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையை மீளச் செப்பனிடுவது பற்றி அந்தச் செய்தியில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஏ-9 நெடுஞ்சாலையின் ஒரு பகுதியைக் கைப்பற்றியுள்ள விடுதலைப் புலிகள் அப்பகுதியின் இரு முனைகளையும் மூடிவைத்திருக்கின்றனர். படையினர் விடுதலைப் புலிகளின் காப்பரண்களுக்கு வெளியே தமது காப்பரண்களை அமைத்துள்ளனர்.

### புலிகளின் தந்திரோபாயம்

யாழ்.குடாநாட்டிலுள்ள படையினருக்கான உணவு, ஆயுதத் தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் சென்றடைவதைத் தடுப்பதற்காகவே விடுதலைப் புலிகள் பாதையை மூடிவைத்துள்ளனர். இந்த நோக்கம் காரணமாகவே வடக்கு நோக்கிச் செல்லும் கடற்கலங்கள் மீது தாக்குதல்களையும் விமானங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்றனர்.

வடபகுதியில் இருந்து படையினரை விரட்டியடிக்கும் போது அவர்களுக்கான விநியோகங்களை முடக்குவது மிகவும் முக்கியமானது என்பதை புலிகள் அறிவர். யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவத்தினருக்கான விநியோக மார்க்கங்களுக்கு ஊறு விளைவித்து - படையினரை முகாம்களுக்குள் முடக்கியே கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் பல வெற்றிகளைப் பெற்றனர்.

அவ்வாறெனில் தற்போது ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டு பொது மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசெல்லும்போது படையினருக்குமான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் இலகுவில் கொண்டுசெல்ல அனுமதிக்க விடுதலைப் புலிகள் தயாரா?

தந்திரோபாய ரீதியில் கவனத்தில் எடுக்கும்போது படையினர் மீதான முக்கிய அழுத்தத்தை நீக்கவேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இல்லை. எனவே அரசுடன் பகிரங்கமாக உடன்பாடு காணப்படும்வரை விடுதலைப் புலிகள் ஏ-9 நெடுஞ்சாலையைத் திறப்பர் எனச் சிந்திக்க முடியாது.

அவ்வாறு திறப்பினும் நெடுஞ்சாலையில் தமது கட்டுப்பாட்டிலுள்ள முழுப்பகுதியையும் விடுதலைப் புலிகள் திறந்துவிடுவார்கள் எனச் சிந்திக்கமுடியாது.

பொ.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பியினர் கடந்த தேர்தல் காலத்தில் கூறியதுபோல் "யானை - புலி கூட்டு" இருந்தாலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கு வசதிகளை உண்டாக்கும் விதத்தில் செயற்படுவர் என வாதிக்கமுடியாது. காரணம் நாட்டை துண்டாடவே "யானை - புலி கூட்டு" என அக்கட்சிகள் கூறிவந்தன. அக்கட்சிகளின் கூற்றில் உண்மை இருக்குமாயின், புலிகள் இராணுவத்திற்கு வசதிகளை வழங்குவர் என வாதிடமுடியாது. ★

# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலையில்!

## 2ஆம் திகதி மக்ஹெய்சர் ஸ்ரேடியத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இந்த எழுத்துப் பரீட்சையில் தரம் 'பி', தரம் 'சி' ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கே இலங்கை வலைப் பந்தாட்ட சங்கம் நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை திருகோணமலை மக்ஹெய்சர் ஸ்ரேடியத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

### தரம் - பி

சுரேந்தினி சிதம்பரநாதன், இராதை அருளம்பலம், துரைராஜசிங்கம் விக்னேஸ்வரன், மரியதாஸ் பேட்டி பனிஸ்ரர்.

### தரம் - சி

செல்லையா சுகிதரன், பி.பாமினி, கே.கனகராஜ், பி.பார்த்தீபன், என். சிவராஜா, திருமதி அருள்குமாரன், சுபாஜினி, மகாலிங்கம் அருள்குமாரன், பவானி சதானந்தன், திருமதி நந்தகுமாரி சிவசுப்பிரமணியம், துசியா சிவச்செல்வம், எஸ்.கௌசிகன், அருமைத்துரை ஆனந்தன், என்.மதியழகன், தீவராஜ் ஜெயதீபன், மகாநந்தகுமாரி கனகரட்ணம் -

ரி.மகேஸ்வரலிங்கம், சிவசிறி வடிவேல், கோபால் டானியல் மதியழகன், திருமதி எஸ்.தில்பான சமங்கல்யா, விநாயகமூர்த்தி ஐங்கரன், கே.சசிக்குமார், விவேகானந்தன் சாரங்கன், நவரட்ணம் நவராஜா, நவரட்ணம் சிறிமுருகதாஸ் காந்தன், பாலசுந்தரம் ஜெயரூபன், சூடாமணி அகிலன், யோகேஸ்வரன் விமலன், பாலசிங்கம் வாசுதேவன்; சிவலிங்கராஜ் சிவமோகன்; செல்வராசா செல்வச்சந்திரன் -

ரி.கலைமகள், வைத்திலிங்கம் முருகதாஸ், குருசாமி முகுந்தன், பேணாட் ஆன்சலம், யூலி பிரகாசராசா, மேரிகெவின் கமிலஷ், ஜெறால்டின் றெமின்ரா ஜோண் விக்டர், மிதிலா கனகசிங்கம் -

பி.பாஸ்கரன், மரியதாஸ் றிச்சட் மோகனதாஸ், செல்லையா மகிந்தன், செ.ரமணன், செ.திருமாறன், கே.முகுந்தன், ஏ.வசந்தன், சிவராஜ் ஜெயக்குமார், திருமதி லலிதாம்பிகை மகேஸ்வரன், என்.சிறிகாந்தன், என். கஜேந்திரன், கவிதா சோமசுந்தரம், திருமதி அ.கருணாகரன், நாகராஜா ரவீந்திரன், பூமாதேவி, சி.யூட் பரதமாறன்.

(ச-4-ரி)



அச்சுவேலியைச் சேர்ந்த சுந்தரம் இமயகாந்தன் என்னும் இளைஞர் 'ஹைஏஸ்' வானை தனது தலைமயிரில் வைத்துக் கட்டி அச்சுவேலிப் பிரதான வீதி வழியாக அச்சுவேலி பஸ்நிலையம் நோக்கி இழுத்து வருவதையும், இவரின் திரச்செயலை பொதுமக்கள் பார்த்து ரசிப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

86 ஸ்ரீ 8500 என்னும் இலக்க முடைய எக்கணமிக்பவர் - 90 மோட்டார் சைக்கிள் புத்தகம், TAX, TRANSFER FORM என்பன மாகியம்பதி சந்திக்கும் அளவெட்டிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ச.பாலசுப்பிரமணியம் அஜந்தன், அளவெட்டி தெற்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (97226)

### விற்பனைக்கு

34 sri 0036 ருக்குமணி கயஸ் வான் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை. தொடர்பு: 18/4 (66), சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (97348)

மோட்டார் சைக்கிள் LANCER -50 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.சுரேஸ்குமார், 466/2, 1st LANE, CHUNDIKULY. (குழந்தை இயேசு ஆச்சிரமம் முன் ஒழுங்கை). (97344)

### பகுதி நேர ஆங்கில ஆசிரியர் தொடர்ந்து பணியாற்றமுடியும்

தென்மராட்சி,ஜன.21

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடந்த வருடம் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் இவ்வருடமும் கடமையைத் தொடர விரும்பினால் வலய அலுவலகத்தில் விண்ணப்பப் படிவததைப் பெற்று அதிபர் ஊடாக விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

---

## ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

**யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை**

**பழைய மாணவர் சங்கம் (2002)**

மேற்படி பொதுக்கூட்டமானது எதிர்வரும் 04.02.2002 திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் பாடசாலை அரங்க மண்டபத்தில் சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஆயுட்கால, சாதாரண அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

திருமதி கை.இந்திரன் தலைவர். | ச.செந்தூரன் பொருளாளர். | இரா.அகிலன் பொதுச்செயலாளர்.

(97350)

---

## கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம் 03 . 04 . 1930



மறைவு 18 . 01 . 2002

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு.சபாலிங்கம் விநாயகமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

### சபாலிங்கம் வாலாம்பிகை

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தலைவரும், நிர்வாகத்தினரும்,
வேலணை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.

(C/20386)

---

# கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்**
  (பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பார்ச்மென்ட் ஐசிங், புறொஸ்ரிங் ஐசிங், Fondant Icing மற்றும் மாச்சீனி அலங்காரம்)
- **உணவு தயாரித்தல்**
  (கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல். இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
- **உடை தயாரித்தல்**
  (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
- **பூவேலை**
  (ஸ்ரொக்கின் நெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச் செண்டுகள் Bouquet செய்தல்)
- **கைவேலை**
  (பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத் துணி வேலை, கம்பளி நூல் வேலை, றிபன் வேலை)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் (FEBRIC PAINTING)**
  (கதிரை விரிப்பு, தலையணை உறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கோலம் வகுப்புகள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம 6 மாதம்.
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- கிழமை நாள் பிரிவு பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவு பயிற்சிகள் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும்.

✓ சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்:- 27.01.2002 (ஞாயிறு)

✓ கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்:- 28.01.2002 (திங்கட்கிழமை)

மேலும் விவரங்களுக்கு காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நேரில் தொடர்புகொள்ளவும்.

- இயக்குநர்.

(C/20399)

---

## கல்விச்சாலைக் காட்சிகள்



இணுவில் மத்திய கல்லூரியில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த 15 மாணவர்கள் அண்மையில் பரிசுப் பொருள் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிப்பு விழாவின் பின்னர் கல்லூரியின் துணை அதிபர் வி.பரஞ்சோதியுடன் மாணவர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம். (க-7)



சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. உடுவில் கல்விக் கோட்டம் நடத்திய "நீதிச் செய்யுள்"மனனம் செய்யும் போட்டியில் முதலிடம் பெற்ற பத்மநாதன் விகிர்தனனுக்கு உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். (க-9)



நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் கு.லிங்கநாயகம் அண்மையில் சேவையில் இருந்து ஓய்வுபெற்றார். இது குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரிவுபசார விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஓய்வுபெற்ற அதிபருக்கு ஆசிரியை செல்வி மா.உதயராணி நினைவுப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் பாராட்டுரை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். வித்தியாலயத்தின் புதிய அதிபர் கோ.பத்மநாதன், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் க.நவநீதன் (மோகன்) ஆகியோரும் படங்களில் உள்ளனர். (க-7)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி குழந்தை யேசு பாலர் பாடசாலையில் கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டன.

மேற்படி நிகழ்வுக்கு வருகைதந்த அருட்தந்தை ஜே.அன்ரனிதாஸ், கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார், கார்மேல் சபை இல்லத் தலைவி அருட்சகோதரி ஜே.ஜீவந்தி மற்றும் அருட்சகோதரிகள், சிறுவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையை கேட்டு ரசிப்பதைப் படத்தில் காணலாம். (க-6)

# 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமச்சின்னங்கள் கண்டுபிடிப்பு

## அக்கராயன் ஆற்றின் கிழக்கில்

அக்கராயன் ஆற்றின் கிழக்குப் பகுதியிலுள்ள காட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வின்போது 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமச்சின்னக் கட்டுமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாரிய அளவிலான இந்த ஈமச்சின்னக்கட்டுமானம் வரலாற்றோடு சம்பந்தப்பட்டது என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சிங்கள அரசு, அதன் வரலாறு எனக் குறிப்பிடும் விஜயனின் வருகையைவிட முந்நூறு ஆண்டுகள் தொன்மையானது என்பதை அக்கராயன் ஈமச்சின்னக் கட்டுமானம் நிரூபித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னக் கட்டுமானம் பாரிய அளவில் செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தது. செங்கற்களால் ஆன மேடைத் தொகுதி மையத்தில் பானை வடிவிலான கட்டுமானத்தில் மூன்று தொகுதிகளாக மூன்று சிறிய ஈமத்தாழிகள் வைக்கப்பட்டிருந்தன.

சாம்பலுடன், இரும்பு, செம்பு, உலோகங்களாலான மோதிரங்களும், தங்கத்தினாலான சிறிய சிமிழும் தாழிகளில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஈமச்சின்னக்கட்டுமானம் தொல்லியல் ஆய்வாளர் நா.குணரத்தினத்தினால் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னக் கட்டுமானம் ஒரு புராதன குளத்தின் அணைக்கட்டிற்கு அருகில் அமைந்துள்ளது.

இக்கட்டுமானம் செங்கற்களாலும் சுண்ணக்கற்களாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டுமானத்தில் இருந்து பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல்த்துறை காலக்கணிப்பீட்டின்படி இந்த ஈமச்சின்னக்கட்டுமானம் 2,700 ஆண்டுகள் தொன்மையானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அகழ்வின்போது மீட்கப்பட்ட இந்த ஈமச்சின்னக் கட்டுமானம், அமைக்கப்பட்ட காலம் இலங்கைத் தீவிலும் தமிழகத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் உச்சம் பெற்று இருந்த பெரும் பண்பாட்டுக்காலமாகும்.

அக்கராயன் ஆற்றின் கிழக்குப் புறத்திலுள்ள காட்டில் அதன் கிளையாறின் அருகே அமைந்துள்ள ஈமச்சின்னக்கட்டுமானம் மிகவும் சிறப்பாக கணித முறையில் கணக்கிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. தொல்லியல் ஆய்வாளர்களை வியப்படைய வைத்துள்ளது.

கற்களைச் செதுக்கி கட்டுமானம் எதுவும் செய்யப்படாது கிறவல் மற்றும் வெள்ளைக் கற்களைக்கொண்டு கிடைத்த அளவுகளில் அடுக்கி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தது. 2,700 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இக்கட்டுமானம் வன்னியின் மிக முக்கியமான வரலாற்றுச் சான்று என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தல் நீதியாக நடப்பதை அரசு உறுதி செய்யும்

## அமைச்சர் கரு ஜெயசூரிய தகவல்

கொழும்பு,ஜன.21

உள்ளூராட்சித் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமான அடிப்படையிலும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த அரசு சகலவித நடவடிக்கைகளையும் எடுக்கும்.

மின்வலு அமைச்சர் கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேலியகொடயில் விகாரை ஒன்றில் நடந்த வைபவத்தில் அமைச்சர் உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்களிப்பின்போது எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறுவதை அரசு அனுமதிக்கமாட்டாது. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படுவதை நிச்சயிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி உள துறை அமைச்சருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை தெரிவித்துள்ளார். அடுத்த வாரம் அமைக்கப்படவிருக்கும் அரசமைப்புக் கவுன்ஸில் இதனை உறுதிப்படுத்தும்.

பொலீஸ், தேர்தல், அரசசேவை, நீதித்துறை என்பன சம்பந்தமாக அமைக்கப்படவிருக்கும் ஆணைக் குழுக்கள் காரணமாக அரச சேவையாளர்கள் எத்தகைய தலையீடுமின்றி தங்களது கடமைகளை நடத்தமுடியும். நாட்டின் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் பொதுமக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது - என்று அமைச்சர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தேர்தல் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கென இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (ஐ-9)

# பேச்சுக்கு உகந்த சூழலை இந்தியா உருவாக்கவேண்டும்!

## மலையக மாதர் அமைப்பு கோரிக்கை

கொழும்பு,ஜன.21

சமாதானப் பேச்சுகளுக்குப் பொருத்தமான சூழலை உருவாக்க இந்திய அரசு உதவவேண்டும்.

தேசிய தொழிலாளர் காங்கிரஸின் மாதர் அமைப்பு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவிலேயே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்த வேண்டுகோளை ஆக்கபூர்வமான வகையில் ஆராயுமாறு இந்தியப் பிரதமருக்கு, காங்கிரஸின் மாதர் அமைப்பினது தேசிய ஒருங்கமைப்பாளர் வேலம்மாள் செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நோர்வே உட்பட பல மேற்கு நாடுகள் தீவிர அக்கறை காண்பிக்கின்றன. எனவே தெற்காசியாவின் முன்னணி ஜனநாயக நாடாக உள்ள இந்தியா, இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் உதவுவதற்குரிய பாரிய பொறுப்பையும், உரிமையையும் கொண்டுள்ளது என்றும் திருமதி வேலம்மாள் செல்லச்சாமி இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## சமய சந்நிதி

சுழிபுரம்,ஜன.21

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் 3.30 மணிமுதல் அபிஷேகம், பூசை ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார். தினமும கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும். இறுதிநாள் அன்று சங்காபிஷேகம் இடம்பெறும். (ஐ-28)

## பூந்தோட்டம் முகாமுக்கு விஜயம்

கொழும்பு,ஜன.21

வன்னிக்கான புனர்வாழ்வு துணை அமைச்சர் நூர்தீன் மசூர் வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமை நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளார்.

அங்கு 9 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்று அங்குள்ளோர் முறைப்பாடு தெரிவித்தனர். இந்த விடயத்துக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

வவுனியாவில் உள்ள கல்விக் கல்லூரிக்கும் அவர் விஜயம் செய்தார். (ஐ-9)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வரலாற்றுக் கழகத்தின்
காலச்சுவடு? 



தரம் 5 புலமைப்பரிசில்
விசேடவகுப்பு
இப்போது நடைபெறுகிறது.
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.
IBS - கோயில் வீதி,
ICRC க்கு அருகில். (97366)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று மட்டும்
பிரசாந்த், ஷாளினி, வடிவேலு
மற்றும் பலர் நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
நாளை முதல்
நினைத்தேன் வந்தாய் (C-20231)

ராஜா யாழ்ப்பாணம்
அஜித், மம்முட்டி, தபு,
ஐஸ்வர்யா, மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த
கண்டு கொண்டேன்
கண்டு கொண்டேன்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
விரைவில்
பம்மல் K.சம்பந்தம் (C/20092)

லஷ்சுமி இணுவில்
மம்முட்டி, முரளி, ரம்பா,
தேவயானி, அப்பாஸ
நடித்த
ஆனந்தம்
(ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
மகத்தான பொங்கல் வெளியீடு
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ்
நடித்த
ரிஷி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)




யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவகத்துக்கான காணிக் கொள்வனவு மற்றும் கட்டடம் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் பிரதமரின் அந்தரங்கச் செயலாளர் சமன் அத்தாவுட, அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோருடன் நிறுவக இயக்குநர் எஸ்.இராஜரட்ணம், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இணைந்து எடுத்துக் கொண்ட படம்.

# கனேடிய நடுவர்களை அசத்திய ஈழத்தமிழ்ச் சிறுவன்!

இலங்கைத் தமிழ்ச்சிறுவன் ஒருவன் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சாதனைகள் புரிந்திருக்கின்றான். அவனது சாதனைகளைக்கண்டு நடுவர்களே அசந்துவிட்டனராம். திருவரன் சபாரத்தினம் என்னும் இச்சிறுவன், ஸ்காபரோ டெல்ரா ஹோட்டலில் நடைபெற்ற பொது அரங்கத்தில் பங்குபற்றினான், கனேடிய மத்தியஸ்தர்கள் மூவர் முன்னிலையில் சிறுவனின் சாதனை நிறைவேறியது.

150 நாடுகளின் கொடிகள், மூன்று அட்டைகளில் ஒட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அரங்கில் அகரவரிசைப்படி ஆப்கானிஸ்தானில் இருந்து சாம்பியா வரையான 150 நாடுகளின் கொடிகள் இவை.

இரண்டு நிமிடம் 23 செக்கன்களில் 150 கொடிகளையும் தொட்டுக் காட்டி, அவற்றின் பெயர்களையும் பிழையின்றிக்கூறி முதலாவது 'சபாஷ்' பெற்றான் திருவரன்.

அடுத்ததாக ஒருநிமிடத்தில் 77 நாடுகளின் கொடிகளை அடையாளம் கூறி அடுத்த 'சபாஷ்' பெற்றான்.

மூன்றாவதாக, நடுவர்கள் தங்களுக்கு இஷ்டமான கொடிகளைக் காட்டி அவை எந்த நாட்டினவை என்று கேட்டபோது ஒன்றுகூட பிழையாகக் கூறாது 20இற்கும் அதிகமான கொடிகளை உடனுக்குடன் கூறியபோது நடுவர்களே அசந்து விட்டனர். (ஐ)

# மன்னார் நிலைமையை ஆராய உதவி அமைச்சர் அங்கு விஜயம்

வன்னிப் புனர்வாழ்வு, புனரமைப்பு உதவி அமைச்சர் நூர்தீன் மசூர் எதிர்வரும் 25ஆம் திகதி மன்னாருக்கு விஜயம் செய்வார்.

மன்னார் மாவட்டத்தில் நிலைமைகள், மக்களின் தேவைகள், புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து உதவியமைச்சர் ஆராய்வார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார். இதற்கான ஏற்பாடுகளை மன்னார் அரச அதிபர் வே. விஸ்வலிங்கம் மேற்கொண்டு வருகிறார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர்,
சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)

சுதுமலை வடக்கைச் சேர்ந்த செல்லையா கந்தையா நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியினரின் மூத்த மகனும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த தங்கேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் திருமதி புவனேஸ்வரி (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ஸ்ரீகணேசன் (விரிவுரையாளர், வவுனியா வளாகம் - யாழ். பல்கலைக்கழகம்), திருமதி சோமேஸ்வரி (ஆசிரியர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), சித்தீஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீகந்தவேள் (ஆசிரியர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), திருமதி சிவனேஸ்வரி (டென்மார்க்), ஸ்ரீநந்தகோபன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அகிலாண்டேஸ்வரி, ஸ்ரீகருணாகரன் (மாணவன், கலைப்பீடம் முதலாம் வருடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ந.சண்முகராஜா (துவாரகாஸ், பருத்தித்துறை), செல்வகுமாரி (வவுனியா), ந.அமரசிங்கம் (முகாமையாளர், 'கின் றோஸ் இன்', கொழும்பு), அ.கதிர்காமநாதன் (சுவிஸ்), செல்வலட்சுமி (ஆசிரியர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்), சி.சிவகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் சுதுமலையில் நடைபெறும். விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தங்கேஸ்வரி (மனைவி),
க.ஸ்ரீகந்தவேள் (மகன்)
இணுவில் கிழக்கு.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*
(97368)

## இராமு சின்னத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்)

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த இராமு சின்னத்தம்பி நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.01.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

தகவல்:
வே.வரதராஜன்
(ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்.)
(C/20405)

# டாநாட்டுக்கான தரைப்பாதையை றப்பதில் அரசுக்கு ஆர்வமில்லை

கொழும்பு,ஜன.21

வவுனியாவுக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான கண்டி வீதியூடான தரைவழிப் பாதையை உடனடியாகத் திறப்பதற்கு புலிகள் தயாராக உள்ளபோதிலும் அதை விடுத்து வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு மற்றொரு தரைப்பாதையைத் திறப்பதிலேயே அரசு ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா ஊடாக குடாநாட்டுக்கான தரைப் பாதையைத் திறப்பதற்கான முன் ஆயத்தங்கள் வேகமாக நடைபெற்று வருவதாக அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும் கண்டி வீதி ஊடாகக் குடாநாட்டுக்கான தரைவழியைத் திறப்பதில் அரசு உண்மையிலேயே அக்கறை செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது.

வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த முன்னணி நிலைகள் இந்த ஏ-9 கண்டி வீதியிலேயே அமைந்துள்ளன. இந்தப் பாதையைத் திறந்து, பொதுமக்களின் போக்குவரத்தை அனுமதிப்பது எதிர்காலத்தில் பாதுகாப்பு ரீதியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று படையினர் கருதுவதாகத் தெரிய வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டே பாதை திறப்பு விடயத்தை அரசு கையாண்டு வருவதாகவும் -

புலிகளின் பிரதேசத்துக்கு மற்றொரு வசதியான பாதையைத் திறந்து, பொதுமக்களின் போக்குவரத்தை இலகுவாக்கி, அதன்மூலம் புலிகளைத் திருப்திப்படுத்துவதே அரசின் தற்போதைய நோக்கம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ-3)

# வெள்ளரசு மரத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் குறைப்பு!

## நெருங்கிச் சென்று தரிசிக்க வசதி

வவுனியா,ஜன.21

அநுராதபுரத்தில் அமைந்துள்ள புனித வெள்ளரசு மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகள் அகற்றப்பட்டுள்ளன.

அங்கு செல்லும் யாத்திரிகர்கள் இதுவரை காலமும் மரம் அமைந்துள்ள இடத்துக்கு வெகு தொலைவில் - சுமார் ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் - நின்றவாறே வெள்ளரசு மரத்தைத் தரிசிக்க முடிந்தது.

தற்போது பாதுகாப்பு வேலிகள், தடைகள் அகற்றப்பட்டதால் மரத்துக்குச் சமீபமாகச் சென்று யாத்திரிகர்கள் வழிபட வாய்ப்புக் கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளரசு மரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பாதுகாப்பு தொடர்ந்து பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

யாத்திரிகர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் மரத்தடிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் கடைப்பிடித்து வரும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை ஒரு நிலையான - நிரந்தரமான - போர் நிறுத்தமாக மாற்றியமைப்பது பற்றியும், அப்போர் நிறுத்தத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றியும் இப் பேச்சுக்களில் ஆராயப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-3-9)

### மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து இரவு புறப்படும் வாகனங்கள் மறுநாள் காலை 6.30 மணிக்கெல்லாம் மட்டக்களப்பு நகரை வந்தடைகின்றன. இதனால் கொழும்பு பத்திரிகைகளும் காலையில் நேரகாலத்துடனேயே கிடைக்கின்றன. (ஐ)

### யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் முடிவு செய்திருப்பதாகப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உளள வன்னிப் பிரதேசத்துக்கு தற்போது விஜயம் செய்துள்ள தென்பகுதி மக்கள் சுமார் இரண்டாயிரம் பேரில் பத்துப் பிரதிநிதிகள் தவிர ஏனையோர் மடுவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பத்துப் பிரதிநிதிகளும், பி.பி.ஸி. உட்பட சில செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்களும் மட்டும் புலிகளின் அரசியல்துறைச் செயலகம் அமைந்துள்ள மல்லாவிக்குக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று புலிகளின் தலைவர்களைச் சந்திப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் கைதிகளில் ஐவர் விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

### கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை யாழ்.சிறையில் விளக்கமறியலில் வைத்த பின்னர், அன்றைய தினம் யாழ்.நீதிமன்றில் முற்படுத்துமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

தானும் தனது சக கைதிகள் மூவரும் தப்பியோடுவதற்கு சிறைக் காவலர்கள் இருவரே உதவி செய்ததாக ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து சம்பந்தப்பட்ட சிறைக்காவலர்கள் இருவரையும் கைது செய்யுமாறு யாழ்.நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்த உத்தரவைத் தொடர்ந்து பெருமாள் டேவிட், றெஜினோல்ட் திவ்விய மனோகரன் ஆகிய இரண்டு சிறைக்காவலர்களையும் கைது செய்த பொலீஸார், அவர்களைத் தற போது பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கின்றனர்.

அவர்கள் இருவரும் இன்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவர் என யாழ்.பொலீஸ்நிலைய தலைமைப் பொலீஸ் அத்தியட்சகர் சி.என். குடாஹெட்டி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். (உ-4-6-ரி)

# பொருளாதாரத் தடைகளை கிழக்கிலும் தளர்த்தவேண்டும்

## கூட்டணி மத்தியகுழு கோரிக்கை

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசம்மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை தளர்த்தியது போன்று கிழக்கிலும் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகள்மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் நீக்கப்படவேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கண்டவாறு அரசைக் கோரியுள்ளது.

கூட்டணியின் மத்திய குழுவின் கூட்டம் நேற்று கூட்டணித்தலைவர் எம்.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற சமயம் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ மக்கள் தங்கள் மாவட்டங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் செல்வதற்கு தற்சமயம் அமுலில் உள்ள நடைமுறைகள் நீக்கப்படவேண்டும். மக்களின் சுதந்திரமான போக்குவரத்து உறுதிசெய்யப்படவேண்டும்.

★ பாடசாலைகள் வீடுகள், வழிபாட்டு நிலையங்கள் ஆகியவற்றில் படையினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அந்த இடங்களில் இருந்து படையினரை வாபஸ பெறவேண்டும்.

★ விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் அந்த அமைப்புமீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும். கடந்த தேர்தலில் தமிழ்மக்கள் எமக்கு அளித்த ஆணையை ஏற்று, உடனடியாகப் புலிகள் மீதான தடையை நீக்கி, அந்த அமைப்புடன் பேச்சை ஆரம்பிக்கவேண்டும்.

★ அரசும் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பித்து இணக்க நிலை ஒன்றைக்காணும் வரை வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக்கூடாது. (ஐ-3)

# தமிழர்களின் சகல பிரச்சினைகளிலும் இந்து விவகார அமைச்சு கவனம் செலுத்தும்

## கடமையேற்பு வைபவத்தில் மகேஸ்வரன் உரை

இந்து சமய விவகார அமைச்சு வெறுமனே சமய அமைச்சாக மட்டும் இயங்காது. தமிழ் மக்களுடைய துன்ப, துயரங்களைத் தீர்க்கும் ஓர் அமைச்சாக முழுமூச்சுடன் செயற்படும்.

இந்த நாட்டிலே தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்கான நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் அமைச்சு செயற்படும் இதற்குப் பக்கபலமாகச் செயற்படுவதற்கான உறுதிமொழியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் வழங்கியுள்ளார்.

தனது அமைச்சுப் பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட வைபவத்தில் சமய பிரமுகர்கள், அமைச்சு அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

அமைச்சின் செயலாளர் சுபரமேஸ்வரன் தலைமையில் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் இந்து சமய குருமார்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாஸா, வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உட்பட பல அரசியல் பிரமுகர்கள், சமயத் தலைவர்கள் அரசாங்க அதிகாரிகள், தொழிலதிபர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் தி.மகேஸ்வரன் பொனனாடைகள் போர்த்தப்பட்டும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்.

இந்த வைபவத்தில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சராக நான் இருக்கும் வரை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுவேன்.

கடந்த 20 ஆண்டுகால போராட்டத்தினால் விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கு ஓர் உன்னதநிலையை ஏற்படுத்தியுள்ளனர். இந்தப் போராளிகளுக்கு என்றும் பக்கபலமாக நான் செயற்படுவேன்.

தமிழர்களுக்கு ஒரு கௌரவமான தீர்வை அவர்கள் பெற்றுத்தருவார்கள்.

நாங்களெல்லோரும் ஒருமித்த கருத்துடன் ஒன்றுபட்டு செயற்படுவோமானால் கௌரவமான தீர்வு விரைவில் கிட்டும். தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு எமது அமைச்சு தொடர்ந்து பாடுபடும்.

இரண்டாவது தடவையாகவும் என்னை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்த யாழ்ப்பாண மக்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

அந்த மக்களின் நல்வாழ்வுக்கும் வளமான எதிர்காலத்துக்கும் நான் என்றும் பக்கபலமாக நிற்பேன். ஐ.தே.கவினால் உருவாக்கப்பட்ட இந்து கலாசார அமைச்சு கடந்த ஆட்சிக்காலத்தில் திட்டமிட்டு இல்லாமற்செய்யப்பட்டிருந்ததை உணர்ந்த பிரதமர் இந்த அமைச்சின் பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார். இந்தப் பொறுப்புக்களை விட நான் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றேன் - என்று தெரிவித்தார். (ஐ)

### மண்எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பல காலமாக மாட்டு வண்டில்கள்மூலம் வீதி வீதியாக மண்எண்ணெய் விற்பனை செய்து வருகின்றோம். சாதாரணமாக நாளொன்றுக்கு ஆயிரம் லீற்றர் மண்எண்ணெய் எரிபொருள் முகவர்களிடம் பெற்று, விற்பனைசெய்து முகவர் நிலையங்களுக்கு சிறந்த விற்பனையை ஏற்படுத்துவதுடன் எமது வருமானத்தையும் பெற்றுவருகின்றோம்.

இத்தொழிலை நம்பி வாழும் நாம், இப்போது வருமானம் இன்றி தவிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பொதுமக்களுக்கு வண்டில்களில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வது கறுப்புச் சந்தைக்காரர்கள் உருவாக வழி வகுக்கும் என நாம் கருதவில்லை. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-8)


## விற்பனைக்கு வந்துவிட்டன

*வணிகப் பிரமுகர்களே!*

எங்களிடம் வண்ண வண்ண றோல் கலண்டர்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

நாதன் புடைவை அகம்,
பரமேஸ்வராச் சந்தி,
இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

*அல்லது*

இல.82, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். T.P.2220 (97352)



## PERSONAL CLASSES

PHYSICS A/L 2004

M.ஸ்பெல்மன்

*ஆரம்பம்:* 23.01.2002 புதன் காலை 7.00 - 8.00

இரு அலகுகள் ஆரம்பமாகும்.

திங்கள், புதன், வெள்ளி (அடிப்படை)

செவ், வியா, (5.00 - 6.00) பொறியில்

இடம்:- 18 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C-20390)


## மரண அறிவித்தல்

### தென்னர் சின்னத்தம்பி

(கொழும்பார்)

நவக்கிரி மேற்கை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தென்னர் சின்னத்தம்பி அவர்கள் நேற்று (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அசுவதிப்பிள்ளையின் அன்புமிகு கணவனும், தங்கேஸ்வரி (கொழும்பு), சிவானந்தம் (சுவிஸ்), அருளானந்தம் (சுவிஸ்), செல்வானந்தம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானசேகரம் (ஆசிரியர், கொழும்பு), சிவறஞ்சினி, புஸ்பறதி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறோஜன், வைஷ்ணவி, சங்கவி, வஜிதா, நிரஞ்சன், நிதுர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.செல்வானந்தம் (மகன்)

*நவக்கிரி,*
*புத்தூர்.*

(20406)


ஆரம்பமாகிவிட்டது

## வணிகக் கல்வி A/L - 2004

*ஆசிரியர்* திரு. N.உமாகாந்த் B.Com. (Hons)

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:

D.C.M. - ஆரியகுளம் சந்திக்கு அருகில்
பொருளியற் கல்லூரி - சுண்டிக்குளி
எலைற் - ஓட்டுமடம்
குருபரன் - புத்தூர்

*பிரத்தியேக வகுப்புகள்* - 293, அரசடி றோட், நல்லூர்.

தொடர்புகள் நிறுவனங்களில்

*மற்றும்*

1st in Com. இற்குரிய வணிக முகாமைத்துவ வகுப்புகள் D.C.M. இல் நடைபெறுகின்றன. (97321)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

அல்லி அர்ஜுனா

விவரமான ஆளு

அழகி

அல்டி எலக்ரோனிக்ஸ்

(C720403) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.